விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி20 புதன்கிழமை (06.11.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 322

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## தலைவர் "பிரபா"வுக்கு உயர் நீதிமன்றம் விதித்த தண்டனையை கண்டித்து மாபெரும் பேரணி!

### நாளை மறுதினம் நடத்த பொது அமைப்புக்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை யாழ் குடாநாடு தழுவிய வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இவ் ஆர்ப்பாட்டப் பேரணி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக முன்றலிலிருந்து ஆரம்பமாகி பலாலி வீதி ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ் அரச செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

அங்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம் இருநூறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் படவுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தமிழ் மக்களின் அதிருப்பதியை வெளிபடுத்தும் வகையில் இடம்பெறவுள்ள மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் யாழ் மாவட்ட பொது அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள், கல்விசார் அமைப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள், போக்குவரத்து அமைப்புக்கள், வங்கி நிதித்துறை சார்ந்த அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பேரணி ஏற்பாட்டாளர்கள் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி செயலகத்தில்

## பிரதமர் -ஜனாதிபதி நேற்றும் சந்தித்தனர்

(கொழும்பு)

அதிவணக்கத்திற்குரிய அதி மேற்றாணியார் ஒஸ்மால் கோமிசைப் பாராட்டும் வைபவம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் ஒனறாகக் கலந்து கொண்டிருந் தனர்.

இரு தலைவர்களும் அதிமேற்றாணியாரைப் பாராட்டி உரை யாற்றியுள்ளனர். (இ)

### இராணுவத்தை நவீன மயப்படுத்துவதால்

# பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை பெருமளவு குறைக்க முடியாது!

### அரச ஊழியர்களுக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வு இல்லை; பிரதி நிதி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கும் நிதியில் பெரியளவில் குறைப்புச் செய்ய முடியாது.**

**இராணுவக் கட்டமைப்பில் மாற்றல்கள் செய்யப்பட்டு இராணுவம் நவீன மயப்படுத்தப்படவுள்ளதால் பாதுகாப்புச் செலவினத்தை குறைக்க முடியாது என்று பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இக் கருத்தரங்கில் உரையாற்றிய பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்துக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெரியளவில் குறைப்பும் செய்ய முடியாது.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் பெற்ற கடன்கள், ஆயுதக் கொள்வனவினால் செலுத்த வேண்டிய பணம என்பவற்றுடன் குறுகிய காலக் கடன்களையும் செலுத்த வேண்டி



சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்துக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெரியளவில் குறைப்பும் செய்ய

பெற்ற கடன்கள், ஆயுதக் கொள்வனவினால் செலுத்த வேண்டிய பணம் என்பவற்றுடன் குறுகிய காலக் கடன்களையும் செலுத்த வேண்டி

(10ம் பக்கம் பார்க்க)



வரவு செலவுத்திட்டத்தை இன்று சமர்ப்பிப்பதற்கு தயாராகிறார் நிதி அமைச்சர் சொக்ஸி

# இனப்பிரச்சினைத் தீர்வில் அரசும் - புலிகளும் சரியான பாதையில் செல்கின்றனர்

## ஜப்பானிய தூதுவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினை தீர்வுக்கான சரியான சமாதானப் பாதையில் முன்னேறிச் செல்கின்றார்கள். அவர்கள் இன்னமும் பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்களாக உள்ளார்கள். இவ்வாறு ஜப்பானிய சமாதான தூதுவர் ஆகூஸி அக்காஸி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ விடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்திருந்த யப்பானிய சமாதான தூதுவர் ஆகூஸி அக்காஸி எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜ பக்ஷவை நேற்றுச் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வடக்கு கிழக்கில் சமாதானம் ஏற்படுமானால் புனரமைப்பு பணிகளுக்கு பெருமளவு நிதியை யப்பான் வழங்கத் தயாராகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யப்பான் சமாதான தூதுவர் ஆகூசி அக்காஸி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் நேற்றுக்காலை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

(ம)

# வரவு செலவுத் திட்டத்தை பொ. ஐ. முன்னணி எதிர்க்கும்

## நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதென பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று மாலை 7 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கூடி ஆராய்நத போதே வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமை

(10ம் பக்கம் பார்க்க)

**அன்பு வாசகர்களே!**

**தவிர்க்க முடியாத காரணத் தால் இன்று சங்குநாதம் வெளிவரவில்லை.**

**ஆ-ர்**

## ஐ.தே.முன்னணி அரசின்

# 2வது வரவு செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிப்பு!

(நமது நிருபர்)

நிதி அமைச்சர் கே.என் சொக்ஸியினால் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் 31 ஆயிரத்து 400 கோடி ரூபா வருமானமாகவும் 65 ஆயிரத்து அறுநூறு கோடி ரூபா மொத்தச் செலவீனமாகவும் கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மொத்த வருமானத்திற்கும் செலவுக்கும் இடையிலான 33

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனை கைது செய்ய கோருகிறது சிஹல உறுமய

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவா் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பை விமர்சித்த புலி உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி சிஹல உறுமய ஆராய்ந்து வருகின்றது. தாய்லாந்தில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வன்னி திரும்பியுள்ள புலிகளின் தலைவர்களை கொழும்பில் வைத்துக் கைது செய்யுமாறு சீ.ஐ.டியினருக்கு உத்தர

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஒந்தாச்சி மடத்தில்
# மர்மப் பொருள் பறப்பு

(மட்டக்களப்பு)

இரவு நேரத்தில் பச்சைநிற ஒளியைப் பாய்ச்சியபடி மர்மப்பொருள் ஒன்று ஆகாயத்தில் இருந்து தரையிறங்கிச் சென்ற சம்பவம்களுவாஞ்சிக்குடி பகுதியில் உள்ள ஒந்தாச்சிமடத்தில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வெள்ளியன்று 10 மணியளவில் வாழைச்சேனை காகித ஆலையில் சிவில்பொறியியலாளராக கடமையாற்றும் எம். ஜெயந்தி என்பவர் இதனை அவதானித்துள்ளார்.

சுமார் 6அடி விட்டமுள்ள இளம்பச்சை நிறமான பிரகாசமான ஒளிவட்டமொன்று தனது தலைக்கு மேலாக சுமார் 20அடி உயரத்தில் பறந்து சென்றதாகவும்,

பின்னர் தனக்கு முன்பாக சுமார் 3அடி உயரத்திற்குப் பதிந்து வந்து வீதிக்கு அருகாமையில் தரையிறங்கியதாகவும் உடனேயே மர்மப்பொருளின் விளக்குகள் அணைந்து விட்டதாகவும் தனது அனுபவத்தை அவர் விபரித்துள்ளார்.

இதேவேளை, இது குறித்து ஆராய களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றபோது,

அன்றிரவு மழை பெய்த காரணத்தினால் அப்பகுதி மண் வெள்ளை நிறமாகக் காணப்பட்ட போதும் மர்மப்பொருள் இறங்கியதாக கூறப்பட்ட இடம் மாத்திரம் கரிய நிறமாக இருந்ததுடன் அருகில் பற்றைகளும் முறிந்து இருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து மண்ணின் மாதிரியை பொலிஸார் ஆர்தர்ஸி கிராக் நிலையத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த இடத்தில் பெரிய உருவமுடைய பறவைகள் கால் பதித்த விநோதமான தடயமும்காணப்படுகிறதாம். (உ)

## தரம் 11 மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்காக மேலதிக வினாத்தாள்கள் தேவைப்படுமாயின், மேற்படி வலயப் பாடசாலைகள் யாழ். கல்வி வலயத்துடன் தொடர்பு கொண்டுவினாத்தாள்களைப் பெற முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ- 06)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமயக் கலைப்பொக்கிசங்களைப் பாதுகாப்பது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 14ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இந்துக் கலைப் பொக்கிசங்களை எவ்வாறு பாதுகாக்கலாம்என்பது தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (உ-6)

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின்
# பரிசளிப்பு விழாவிற்கு பழையமாணவருக்கு தடை

வலிவடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இயங்கிவரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு முப்பது பழைய மாணவர்களுக்கே இராணுவம் அனுமதி வழங்கியிருந்தது இதனால் ஏனைய பழைய மாணவர்கள் விழாவில் கலந்துகொள்ள முடியவில்லை.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான போது மாணவர்களும் மாணவர்களது பெற்றோரும் பரிசளிப்பு விழாவிற்குச் செல்வதற்குத் தெல்லிப்பழை தடைமுகாமில் இருந்து கல்லூரிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

எனினும் இப் பரிசளிப்பு விழாவிற்கு பழைய மாணவர்கள் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்காமையால் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற பழைய மாணவர்கள் தமக்குரிய பரிசில்களைப் பெறமுடியாதுபோனதாக கல்லூரி வட்டாரங்கள் தெவித்துளளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருப்பதினால்ககல்வி செயற்பாடுகளுக்கும் மற்றும் வைபவங்களுககும் பெற்றோர்மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள் கடந்த மாதம் நடைபெற்ற ஆசிரியர் தினத்திற்கும் பழைய மாணவர்கள் அனுமதிக்கப்படாமையால் ஆசிரியர் தினம் கொண்டாடப்படவில்லைஎன்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது

# தீபாவளித் தினத்தன்று அட்டகாசம்புரிந்தவர்களுக்கு நீதிபதி தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையப் பகுதியில் தீபாவளித் தினத்தன்று அடாவடித்தனத்தில் ஈடுபட்ட இளைஞர் குழுவினரில், பொலிசாரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள், நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில், நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, தர்மராஜா றெஜினோல்ட் என்பவரை இரண்டாயிரம்ரூபா காசுப் பிணையிலும், 15ஆயிரம்ரூபா சரீரப்பிணையிலும் விடுதலை செய்தார்.

ஏனைய இரண்டுஇளைஞர்களான பெ.சுரேந்திரன், த.சந்திரதாஸ் ஆகியோரிடம் ஆயிரம்ரூபா தர்மப் பணமும்- வாகனக்கண்ணாடியை உடைத்ததற்கு நட்ட ஈட்டுத் தொகையாக 2ஆயிரத்து 500ரூபாவும் அறவிடப்பட்டதுடன இரண்டுவருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(இ-6)

## 3சிங்களயாத்திரிகர்கள் விபத்தில் படு காயம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு, நாகதீபத்திற்குச் சென்ற சிங்கள யாத்திரிகர்கள் மீதுகுறிகட்டுவான் இறங்குதுறையில்கார் ஒன்று மோதியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8.45மணியளவில் குறிகட்டுவான் இறங்கு துறையில் இடம் இடம்பெற்ற இவ்விபத்து சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது

இந்கவிபத்தில் காயமடைந்த எச்.டபிள்யு புஞ்சினோனா(வயது55) எம் ஜி றொசலின்(வயது62) வீ கே. எமலின்(வயது65) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

(ம)

# இராசி பலன்

6 - 11 - 2002

ஐப்பசி 20, புதன்
துதியை மு.இ; 11.04வரை
அனுசம் பி.இ 3.39வரை
இராகுகாலம், 12.05-1.35
நல்லநேரம் 4.35 . 6.05
அமிர்த சித்தம்

**மேடம்**

காரிய தடங்கல், எதிர்பாராத மனஸ்தாபம், உடல் சோர்வு, தொழில்கஷ்டம்.

**இடபம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி. முயற்சி கைகூடும், தனவரவு.

**மிதுனம்**

சந்தோசமான சம்பவம், தேக ஆரோக்கியம்- காரிய நன்மை தொழில் விருத்தி.

**கடகம்**

வியாபார விருத்தி, மனத்தாக்கல், முயற்சி தாமதம் கற்பனை மிகுதி.

**சிங்கம்**

உடல்சோர்வு, சகோதரர் உதவி, தாய்வழிஉறவு, காரிய தாமதம்.

**கன்னி**

இனிய சம்பவம், காரிய நன்மை, போசனசுகம், பிரயாணநன்மை.

**துலாம்**

மாதர்நட்பு, பொருள் விரயம். போசனசுகம் காரிய தாமதம்.

**விருச்சிகம்**

தெளிந்த சிந்தை, பெரியோரால் மதிக்கப்படுதல். திடீர் நன்மை சயன சுகம்.

**தனுசு**

காரியதாமதம், பிரயாணக் கஷ்டம் தொழில்சிறப்பு அதிகாரிகள் ஒத்தாசை.

**மகரம்**

காரிய அனுகூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி, தனவரவு நிலைமாற்றம்.

**கும்பம்**

அதிகாரம் அதிகப்பிரயாசை காரியம் கைகூடும் பிறர்உதவி.

**மீனம்**

பிரயாணம், தாழ்ந்த சுபாவம் முயற்சி தாமதம் பெரியோர் வெறுப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்


# பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# கேள்வி அறிவித்தல்

2003.01.01 தொடக்கம் 2003.12.31 வரையான காலப்பகுதிக்கு கீழ் அட்டவணையிற் குறிப்பிடப்படும் குத்தகைகளை வழங்குவதற்கான கேள்விகள் 2002.11.22 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவங்கள் 2002 11.22 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்: இவற்றிற்குரிய கேள்விப் படிவங்கள் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணம், மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், பெறுமதி சேர் வரியும் செலுத்தி இப்பணிமனையில் 2002 11.20 ஆம் திகதி பிற்பகல் 3.30மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பகாரர் எம்மால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகரித்த தொகைக்கே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தமது கேள்வித் தொகையின் 20 சதவீத தொகை பெறுமதி சேர் வரியாக மேலதிகமாக சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

அட்டவணை

| கேள்வி விபரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கப் படக்கூடிய பிணைப் பணம் | மீளளிக் கப்படாத படிவக் கட்டணம் | பெறுமதி சேர் வரி 20 % |
|---|---|---|---|---|
| மரக்கறிச் சந்தை (கடைகள் நீங்கலாக) | 3,30,300-00 | 3500-00 | 400-00 | 80-00 |
| மீன் சந்தை | 2,75,250-00 | 3000-00 | 400-00 | 80-00 |
| வான்வண்டிக்காலை | 1,12,000-00 | 1500-00 | 300-00 | 60-00 |
| மிதிவண்டிப்பாதுகாப்பு நிலையம் | 1,21,100-00 | 1500-00 | 300-00 | 60-00 |
| மாட்டிறைச்சிக் கடை | 5,10,500-00 | 5500-00 | 500-00 | 100-00 |
| ஆட்டிறைச்சிக் கடை | 40,150-00 | 1500-00 | 300-00 | 60-00 |
| கோழி இறைச்சிக் கடை | 19,950-00 | 1000-00 | 300-00 | 60-00 |
| மரக்கறிச் சந்தையில் அன்பளிப்புத் தொகை 15'/10' தற்காலிக கடைகள் அமைத்து நடத்துதல் | | | | |
| இல.ஏ1,ஏ2,ஏ3 | 15,000-00 | 1000-00 | 300-00 | 60-00 |
| இல.பி1,பி2 | 10,000-00 | 1000-00 | 300-00 | 60-00 |

மேலதிக விபரங்கள் கடமை நாள்களில் கடமை நேரத்தில் பருத்தித்துறை நகராட்சிமன்றப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

ந. சிவபாலதருமகுலசிங்கம்
செயலாளர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை
நகராட்சி மன்ற அலுவலகம்
பருத்தித்துறை, 2002.11.05

அ வின்சன் கெனடி ஜே. பி, யு எம்
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

(C 5216)

அரியாலைப் பிரதேசத்தில்

# இயல்பு வாழ்வு ஏற்படுத்தத் தவறினால் ஆர்ப்பாட்டம் நடத்தும் நிலை ஏற்படும்

## அரியாலை பொது மக்கள் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'அரியாலை, கொழும்புத்துறைப் பிரதேசத்தில் மீள் குடியேற்றமும் இயல்பு நிலையும்' என்ற தலைப்பிட்டு அரியாலை, கொழும்புத்துறை பொதுமக்கள் ஒன்றியம் இலங்கை கண்காணிப்புக்குழு யாழ் பிரதிநிதி, யாழ். மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர், அரசாங்க அதிபர், யாழ் மாவட்டஇராணுவத் தளபதி ஆகியோருக்கு அறிக்கையினை அனுப்பி வைத்துள்ளது.

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

● ஜே/94 கிராம அலுவலர் பிரிவில் செம்மணி ஒழுங்கை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள 30வீடுகள்,

ஜே/95 கிராம அலுவலர் பிரிவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், ஜே/96 கிராம அலுவலர் பிரிவில்- நெடுங்குளம் வீதியில் இருந்து மாநகரசபை எல்லை வரை ஏ-9 கண்டி வீதிக்கு இரு பக்கமும் படையினர் பாவனையில் உள்ளது.

● அரியாலைப்பிரதேசத்தில் தற்பொழுதும் இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகள்

மாம்பழம் சந்தி- காவல் அரண் சரஸ்வதி சனசமூக நிலையம்- 514 பிரிகேடின் மருந்துவப் பிரிவு தபாற்கட்டைச் சந்தி- காவல் அரண் செம்மணி ஒழுங்கையும் அண்டிய பகுதியும்-514 பிரிகேடின் தலைமை அலுவலகமும் சம்பந்தப்பட்ட பிற இராணுவ நிலைகளும் பொன்னம்பலம் வீதியும் அண்டிய பகுதியும் - புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பாரிய இராணுவ முகாம்.

● மேற்படி நிலைவரத்தால் குறிப்பிட்ட பிரதேச மக்கள் தங்களது சொந்த வீடுகளில் மீளக்குடியமர முடியாதநிலை தொடர்கின்றது 200 க்கும் மேற்பட்டகுடும்பங்கள்பாதிக்கப்பட்டுள்ளன.

● மக்களின் வாழ்க்கை நிலைமைஇயல்புக்குத் திரும்புவதற்கு மேற்காட்டப்பட்ட இராணுவ நிலைகள் தடையாக உள்ளன.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வுஒப்பந்தம் கைச்சாத்தாகி 9 மாதங்கள் கழிந்த பின்பும் மக்கள் செறிந்து வாழ்ந்தஅரியாலைப் பிரதேசம் முற்று முழுதாகமக்களின் மீள்குடியமர்வுக்குஅனுமதிக்கப்படாத நிலை மக்களிடையேபெரும்கவலையையும், ஏமாற்றத்தையும்,விசனத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

● இந்தச் சூழ் நிலையில்அரியாலைப் பிரதேசத்தில்இயல்பு நிலைமையைஉருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையைமுன்வைத்து இப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்நடாத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

● நிலைமையைச்சீர் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தாங்கள் இறங்கி அரியாலைப் பிரதேச மக்களின் வாழ்க்கை கூடிய விரைவில் இயல்பு நிலைமைக்குத்திரும்புவதற்குஆவன செய்யுமாறு எமது ஒன்றியம் தங்களைக்கேட்டுக்கொள்கின்றது.

● கொழும்புத்துறை வாழ் மக்களின் பிரதான தொழில் மீன்பிடி, தும்புகைத்தொழில் கொழும்புத்துறை பிரதான வீதியும் அதை அண்டிய கடற்கரைப் பிரதேசமும் இராணுவத்தினால் தடை செய்யப்பட்ட படியால்கடலில்இறங்கி மீன் பிடித்தொழிலை மேற்கொள்ளவோ கடற்கரையில் புதைக்கப்பட்ட மட்டைகளை எடுக்கவோ முடியாத நிலையில்தொழில் இழந்து பெரிய பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

● கொழும்புத்துறை மேற்கு ஜே/62, ஜே/63 பகுதியாகிய கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் இராணுவ முகாம்கள் சுற்றிவளக்கப்பட்டு இராணுவ வேலிகளும், காவலரண்களும், இராணுவத்தினரின் கடைகளும் சூழவுள்ளதனால் பாடசாலை மாணவ, மாணவிகள் பயத்துடன் பாடசாலை செல்லவேண்டியநிலை இந்த நிலை மாற வேண்டும்.

● ஆலயகுருக்களின் வீட்டில் பௌத்த விகாரை இது எமது மதத்தை அவமதிப்பதாகும்.

● கொழும்புத்துறை மேற்கு சனசமூகநிலையம, மைதானம் என்பன இராணுவ பாவனையில் உள்ளது அதை எமக்கு திருப்பி எடுத்து தருமாறுகேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## தொழில் முயற்சியாண்மை அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக தொழில் துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட ஜி.ரி.சற் அலுவலகத்தில் தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி அலுவலகம் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது

யாழ் மாவட்ட ஜி.ரி.சற் அலுவலக உத்தியோகத்தர்கள யாழ் மாவட்ட தொழில்துறைத் திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

## வணிகஜோதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தின் 20 வது வணி ஜோதிமலர் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு மன்றத்தின் தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைத்தலைவர்திருமதிதே.சிவாஸ்கரனும் சிறப்பு விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் த. இராசலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் க.சிவராசாவும் அறிமுகவுரையை யாழ் உயர் தொழில் நுட்பவிரிவுரையாளர் வ.செந்தில்ராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

வட இலங்கை

## சங்கீத சபை பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு ஓகஸ்ட்மாதம் வட இலங்கைச் சங்கீத சபை நடத்திய பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் 12 ஆயிரம் பேர் நடுபூராகவும் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2003 ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் ஜனவரி 6 ஆம் திகதியாகும். (உ-10)

## ஜப்பான் நிறுவன புலமைப் பரிசிலுக்கு யாழ். மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

ஜப்பானை தலைமையகமாக கொண்டிருக்கும் ஜென்றசிமா நிறுவனம் இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக விசேட புலமை பரிசில்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் நேற்று கொழும்பு றான் ஏசியா கோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்து கொண்டார்.

இத்திட்டத்தில் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தஇரு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய ரீதியில்10 மாணவர்கள் மாத்திரமே இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக தபால் ஊழியர் சங்க கல்முனை செயலாளர் யு.எல்.ஏ பிறைசர் தெரிவித்தார். (உ-10)

## புலிகளின் நிலைப்பாட்டில் கதிர்காமர் திருப்தி

(கொழும்பு)

ஜனநாயக அரசியலுக்குத் திரும்புவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதானது வரவேற்கத்தக்க ஒன்று என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டிற்கான விஜயமொன்றை மேற் கொண்ட கதிர்காமர் நேற்று முன்தினம் நாடு திரும்புகையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை திருப்திகரமாகஉள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஏனைய அரசியல் கட்சிகளை அனுமதிப்போம் என புலிகள் தரப்பு கூறியுள்ளதை அவர்கள் தொடர்ந்தும் செயலில் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் படி ஏற்படுத்தப்படவுள்ள அரசியல் குழுக்கள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு விரைவில்தீர்வு காணப்படவேண்டும்என்பதே நாட்டு மக்களின் விருப்பமாகும் என்றும் தெரிவித்தார். (ந-6)

வடக்கு - கிழக்கு புனரமைப்பு

## பொதுத் திட்டம் தயாரிப்பு செயலமர்வு இன்று திருமலையில்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை இனம்கண்டு பொதுத் திட்டமொன்று தயாரிப்பது தொடர்பான செயலமர்வு இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

மாகாணசபை அதிகாரிகள், மாவட்டங்களின் அரச அதிபர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள இச் செயலமர்வல் புனர்வாழ்வுப் பணிகளுக்கென உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டு பொதுத்திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளது.

இதேவேளை இவ்வாறான நிதி உதவிகள் இதுவரை காலமும் அரசு மற்றும் மாகாண சபை மூலமே வழங்கப்பட்டதும் இனிமேல் நேரடியாக மாகாண சபையிடமே வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழில் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

காணி உறுதிப் பத்திரங்களைத் தேடுவதற்கான தமிழ் விண்ணப்பப் படிவங்கள் ஜனவரிமாதம் முதல் பாவனைக்கு வரவுள்ளன.

மேற்படி படிவங்கள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் அமைந்திருப்பதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## 20 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வந்த 20குடும்பங்கள் சுயவிருப்பின் பேரில் முல்லைத்தீவுப் பகுதியில் மீளக் குடியேறியுள்ளன.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இவர்கள் குடியேறியுள்ளனர். (உ-3)

## இனியும் காலம்தாழ்த்தாது கராத்தே பயிலவேண்டும்

### குடாநாட்டு யுவதிகளுக்கு அழைப்பு

(சுண்டுக்குளி)

கராத்தே கலையை நமது பெண்கள் அடிதடி நிறைந்த ஆபத்தான விடயமாகக் கருதுகின்றனர்.

உண்மையில் இதுஒரு நல்ல உடற்பயிற்சி, நல்ல தேகாரோக்கியத்தையும், உடல் உறுதியையும் மனக்கட்டுப்பாட்டையும் வளர்த்துமனிதர்களை ஒழுக்க சீலர்களாக்குவதே கராத்தே.

யுவதிகளையும் கராத்தே கலையில் ஈடுபாடுகொள்ளச் செய்யும் முகமாக செல்வி ஜெயறாஜாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'கராத்தே கலையும் பெண்களும்' என்ற விடயம்பற்றிய கருத்தரங்கு கடந்த வெளளிக்கிழமை ஈச்சமோட்டையில் அமைந்துள்ள யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கப் பணிமனையில் அதன் தலைவர் கப்ரின்டி.ஏ.எம். குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

40 க்கும் மேற்பட்ட யுவதிகள் கலந்துகொண்ட இக் கருந்தரங்கில் முதன்மைவிருந்தினராக கலந்துகொண்ட, யாழ்.பல்கலைக்கழககராத்தே பயிற்றுநர் சென்சேய் றன்சித் சைலேந்திரகுமார் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர்தொடர்ந்தும் கூறுகையில்,

எல்லாவற்றிற்கும் மேலாக கராத்தே பெண்களுக்கு ஒரு தற்பாதுகாப்பு கவசமாகவும் துணைபுரிகிறது.

ஜப்பான்நாட்டில் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இதுஒரு பாடமாக புகட்டப்படுகிறது.

உலகம்முழுவதும் இளைஞர்கள் மத்தியில தற்காப்புக்கலையாக பிரசித்திபெற்றுவரும் இக்கலையை ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் அதிகமாக பயின்று வருகிறார்கள்என்று சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்இருந்து தெரியவந்துள்ளது.

எமது குடாநாட்டு யுவதிகளும் மேலும் காலம்தாழ்த்தாது உடனடியாக இக்கலையை பயிலத்தொடங்கி பயன்அடைய வேண்டும் என்பதே எனதுஅவாஎன்று கூறினார். (உ-110)

# தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க ரஷ்யப் படைகள் தயார் நிலையில்

(மொஸ்கோ)

செச்சினிய பிரிவினை வாதிகளால் திட்டமிடப் பட்டுள்ள புதிய பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் ரஷ்யப் படைகள்முன் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் சேவிஇனூவில் தெரிவித்துள்ளார்.

செச்சினியாவில் ரஷ்யப் படைகள் நிலை கொண்டிருக்கும் சகலபிராந்தியங்களிலும் விசேட அதிரடிப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

செச்சினியத் தீவிரவாதிகள் புதியபயங்கரவாதத் தாக்குதல்களைநடத்தவுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்தே இந் நடவடிக்கைமேற் கொள்ளப்பட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர்மேலும் குறிப்பிட்டார்.

அண்மையில் மொஸ் கோவிலுள்ளநாடக அரங் கொன் றில் சுமார் 700 பேரைச் செச்சினியத் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப்பிடித்து வைத்திருந்தமையும் இப்பணய நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ரஷ்யப்படைகள் மேற் கொண்ட நடவடிக்கையில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த பலர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# கம்போடிய பணயக் கைதிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்

(போனோம் பென்)

கம்போடிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பணய நாடகம் அந்நாட்டுப் பொலிஸாரால் முறியடிக்கப் பட்டது.

இதன்போது பணய நாடகத்தின் சூத்திரதாரிகள் இருவரும் தற்கொலை செய்து உயிரை மாய்துக் கொண்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது

- கம்போடிய வைத்தியசாலை ஒன்றை ஆயுத முனையில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆயுததாரிகள் இருவர் அங்கிருந்த பணியாளர்கள், நோயாளர்கள் உள்ளிட்ட 20பேரை பணயம் வைத்தனர்.

இதனையடுத்து அந்நாட்டுப் பொலிஸார் பணயக் கைதிகளை விடுவிக்கும் வகையில் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர்.

5 மணி நேரம் இடம்பெற்ற இச் சமரின் முடிவில் கடத்தல்காரர் இருவரும் தம்மைத்தாமே சுட்டுத்தற்கொலை செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் இராணுவப் பொலிஸார் இருவர் படுகாயமடைந்துள்ளனர். பணயக் கைதிகள் எவரும் பாதிக்கப்படவில்லை. (உ-40)

## ஜம்மு-காஷ்மீர் மாநில முதலமைச்சராக முஹமட் சயீத் வைபவ ரீதியாக பதவியேற்பு

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக மக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைவர் முக்தி முஹமட்சயீத் நேற்றுமுன் தினம் வைபவ ரீதியாகப் பதவியேற்றுள்ளார்.

காங்கிரஸ் கட்சிக்கும், மக்கள்ஜனநாயகக்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகாரணமாக, கடந்த 16 நாட்களாக நிலவி வந்த இழுபறிநிலை இதன்மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

இதேவேளை பதவி யேற்புவைபவம் நடைபெறுவதற்கு சிலமணி நேரத்திற்கு முன்னதாக முஹமட சயீத்தின் வீட்டருகே பயங்கரவாதிகள் எறிகுண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தியதுடன், இதனபோது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-2)

## பின்லேடனின் புதல்வர் நாடு கடத்தப்பட்டார்

(தெஹ்ரான்)

சட்ட விரோதமாக ஈராக்கினுள்பிரவேசித்த ஒஸாமா பின்லேடனின் புதல்வரான சாக்பின்லேடனை நாடு கடத்தியதாக ஈரான்நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

2மாதங்களுக்கு முன்னர் தமதுநாட்டினுள் சட்ட விரோதமாகக் குடியேறிய20 பேரில்இந்த நபரும்அடங்குவார் எனவும், அவர்கள் அனைவரும் உடனடியாகப் பாகிஸ்தானுக்கு கடத்தப்பட்டதாகவும்,ஈரான் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களை அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லையென அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சு-4)

# பொதுநலவாய அமைப்பில் இருந்து பாகிஸ்தான் தொடர்ந்தும் இடைநிறுத்தம்

## பாகிஸ்தான் கடும்கண்டனம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஜனநாயகம் மீளத்திரும்பும் வரை பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தான் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டிருக்கும் என இவ்வமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் நேற்று முன்தினம் நடத்திய கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து, பாகிஸ்தான் ஜனநாயகத்திற்கு திம்பியுள்ளது என்றும், பொதுநலவாய அமைப்பு போதிய புரிந்துணர்வைப் பெறவில்லையென்றும் பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள பாகிஸ்தான்:-

ஜனநாய வழிக்கு தமது நாடு ஏப்போதே திரும்பி விட்டது என்றும் இது விடயத்தில் பொதுநலவாய அமைப்பு பக்கச்சார்பாக நடக்கிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளது. (சு-4)




## கர்நாடக அரசு மறுப்பு

(புதுடில்லி)

சந்தன மரக்கடத்தல் வீரப்பன், தனது பிடியில் பணயக் கைதியாக வைத்திருக்கும் முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பாவை விடுதலை செய்வது தொடர்பாக ஆராய்வதற்கு கர்நாடக அமைச்சர் ராஜ்கௌடாவை தூதராக அனுப்புமாறு கர்நாடக அரசைக் கோரியுள்ளார்.

இதற்கு கர்நாடகஅரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. (இ)

# 26 வருடங்களின் பின் ஈக்குவடோரில் இயற்கை அனர்த்தம்

(கீவிடோ)

ஈக்குவடோரின் அன்ரோன் நகரிலுள்ள என்ரவன்டோர் எரிமலை கடந்த 26 வருடங்களின் பின்னர், நேற்றுமுன் தினம் வெடித்துத் தொடர்ந்தும் நெருப்புக்கக்கிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பூமியில் இருந்து 10 கிலோமீற்றர் உயரம் வரை புகை மண்டலம் எழுந்துள்ளது.

இதுதவிர, இப்பகுதியில் கால் நடைகள் பல கருகி மாண்டுள்ளதுடன் வயல்வெளிகள் பலவும் அழிந்துள்ளன.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக் கருதி அந்நாட்டு ஜனாதிபதி உஷ்டோநோபா அப் பகுதியில் அவசரகால நிலைமை பிறப்பித்துள்ளதோடு அங்குள்ள பாடசாலைள் அனைத்தையும் மூடிவிடுமாறும் மக்கள் அனைவரையும் சில தினங்களிற்கு வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் அறிவிப்பு விடுத்துள்ளார். (சு-2)

## ஆஸி.-சிங்கப்பூர் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

(கன்பரா)

அவுஸ்திரேலியா விற்கும் சிங் கப்பூரிற்கும் இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பாக இணக் கம் ஏற்பட்டுள்ளது.

இந்த இருதரப்பு வர்த் தக ஒப்பந்தம்மூலம் கோடிக் கணக்கானவர்த்தக சந்தைகளை திறக்க 'வழிஏற்படும் என்றும், இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கும் சிங்கப் பூருக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 வருடங்களாக சுமார் 10 சுற்றுப் பேச்சுக்கள் நடந்த பின்னரே, தற்போது சிங்கப்பூரும் அவுஸ்திரேலியாவும் சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தை செய்து கொள்ள இணங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(சு-4)

# எயிட்ஸைக் கட்டுப்படுத்த உலக நாடுகளிடம் உதவி கோருகிறது சீனா

(பீஜிங்)

எயிட்ஸ்நோய் பரவு வதைத் தடுப்பதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்புத் தேவையென சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நோய் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வ தற்கும், நோயைத் தடுப்பதற்கான மருத்துவப்பயிற்சிகளை வழங்கு வதற்கும் உலகநாடுகள் உதவ வேண்டும் என சீனாவின் சுகாதார அமைச்சர்அறைகூவல் விடுத்துள்ளார்.

எயிட்ஸ்நோயைக் கட் டுப்படுத்துவதற்கான அவசியம், சீனாவில் ஏற்பட்டுள்ள போதிலும்தடுப்பு நடவடிக்கைகள் மிகக்குறைவாகக் காணப்படுவதாகவும்,

அத்துடன், எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் நிபுணத்துவம் மிக்கவர்கள் மிக அவசரமாகவும், அவசியமாக்வும் தமது நாட்டிற்கு தேவைப் படுவதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நோயைக் கட்டுப் படுததுவது தொடர்பாக பீஜிங்கில் நடைபெற்ற கருத் தரங்கில் சீனா,அமெரிக்கா, ஐக்கிய நாடுகள்சபை ஆகிய வற்றைச் சேர்ந்த 300இற்கும் அதிகமான மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

(சு-4)

## இந்தோனேசியாவில் படகு விபத்து 5பேர் பலி 73 பேரைக் காணவில்லை

(அம்ரோங்)

இந்தோனேசியாவின் கிழக்கு கரையோர நகரான அம்ரோங்கில் 200 பயணிகளுடன் சென்ற படகு நீரில் மூழ்கியதில் 5பேர் பலியானதுடன் 73பேரைக் காணவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றஇப்படகு விபத்தில் மீட்கப்பட்ட 122பேரும் சிகிச்சைக்காக அம்ரோங் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அந்நாட்டுஅரசாங் கப்பேச்சாளர் மார்டீர்லூசர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர் களைத் தேடும்பணியில் மீட்புப் பணியினர் ஈடுபட்டுள்ள போதிலும், அவர்கள் பலியாகி யிருக்கலாம் என்று வேறு சில செய்திகள் தெரிவிக்கின்றன.

(சு-4)

# ஐ. நா சபையின் தீர்மானத்திற்கு சதாம் நிபந்தனையுடன் இணக்கம்

(பக்தாத்)

ஈராக்கில் ஆயுதக்களைவு மேற்கொள்வது தொடர்பாண ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஷுசைன் தெரிவித்துள்ளார்.

எகிப்து செய்தி நிறுவனம் ஒன்றிற்கு, கடந்த திங்கட்கிழமை அளித்த பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கான அமெரிக்காவின் நிலைப்பாட்டை அடிப்படையாக கொள்ளாமல் தீர்மான யோசனைகள் அமையவேண்டியது அவசியம்.

ஈராக்கின் பாரிய எண்ணெய் வளங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்ற அமெரிக்காவின் எண்ணம் கைவிடப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் சாசனம், சர்வதேச சட்ட விதிகள், ஈராக்கின் இறைமை மற்றும் பாதுகாப்பு, சுதந்திரம் ஆகியவற்றை மதிக்கக்கூடிய அதே வேளை, அமெரிக்காவின் தீய எண்ணங்களுக்குச்சார்பாக யோசனைகள் அமையக்கூடாது என்ற நிபந்தனைகளுடனேயே ஐ.நாவின் யோசனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முனைந்துளளோம்.

இதே வேளை, அமெரிக்கா ஒருதலைப்பட்சமாகத் தாக்குதல் நடத்தினால் அதனை எதிர் கொள்ளத் தமது நாடு தயாராகு உள்ளது எனவும்.

அமெரிக்காவின் அழுத்தங்கள் மிரட்டல்களுக்கு அடிபணிந்து ஈராக்கின் நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்படுமேயானால், தமது நாட்டு மக்களைப் பாதுகாக்கத் தயாராகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சு-2)

## அல்கெய்தா சந்தேக நபர்கள் யேமனில் கொல்லப்பட்டனர்

(வாஷிங்டன்)

அல்கெய்தா இயக்கச் சந்தேக நபர்கள் 6பேர் யேமனில் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர்கள் விமானத்தில் சென்று கொண்டிருந்த வேளை, அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்திற்குச் சொந்தமான கருவி மூலம் இயங்கும் ஏவுகணைத் தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட்டதாக அவ் அதிகாரி மேலுமம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, யேமன் துறைமுகத்தில் கடந்த 2வருடங்களுக்கு முன்னர், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் குண்டு வைத்துத் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (சு-2)

# இன்று ஒரு தகவல்

## படிப்பும் பட்டறிவும்

இந்த உலகத்தில் படித்துத் தெரிந்திருப்பது கொஞ்சம், பட்டுத்தெரிந்திருப்பது கொஞ்சம் ''தெரிந்துகொள்ளாமல இருப்பது ஏராளம். பாடம் படித்தேன் என்று சொல்வதற்கும், பாடம் கற்றுக்கொண்டேன்என்று சொல்வதற்கும்வித்தியாசம்இருக்கிறதல்லவா? 'அந்த ஆள் படிப்பதற்கு ஒரு புத்தகமகொடுத்தேன்- ஆனால், நான் பாடம் கற்றுககொண்டேன்'' என்றார் ஒருவர். எப்படியென்று கேட்டால், 'கொடுத்தபுத்தகம் திரும்பிவரவில்லை.' அதனால் இனிமேல் யாரிடமும் புத்தகத்தைக் கடன் கொடுக்கக்கூடாது என்று பாடம்கற்றுக் கொண்டேன்' என்றார்;

அனுபலம் என்பதுபடிப்பைவிட அழுத்தமாக மனதிலே பதியக்கூடிய ஒன்று' ஆனாலும் சில விஷயங்களை படிப்பதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். நெருப்புச் சுடும் என்று ஒருபுத்தகத்தில்படித்துவிட்டு, அதை அனுபவித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டுஅதைத் தொட்டுப் பார்த்துக்கொண்டுஇருக்கக்கூடாது. சிலவிஷயங்களைப் படிப்போடு நிறுத்திக் கொண்டால் பிரயோசனப்படாது. நீச்சல் கலையைப்பற்றி தெரிந்து கொள்கிறேன் என்று சொல்லிக்கொண்டுஅதுசம்பந்தமாக ஒருபுத்தகத்தைப் படித்துமுடித்துவிட்டு, உடனே நீச்சல்போட்டியில் கலந்து கொள்வதற்கு நான்தயார் என்று சவால்விட்டால் எப்படி?

ஒருவருக்குச் சமைக்கத் தெரிந்துகொண்டு சம்சாரத்திடம் சவால்விடவேண்டும் என்று ஓர் ஆசை, உடனே ஒரு சமையலகலைப் புத்தகத்தை வாங்கி விழுந்து விழுந்து படித்தார். சமசாரம் கோயிலுக்குப் போயிருக்கிற சமயம் பார்த்துப் படித்ததைப் பரிசோதனை பண்ண ஆரம்பித்தார்; புத்தகத்தில் சொல்லியிருக்கிறபடியெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப்போட்டார். கடைசியில்எதையோ ஒன்றைத்தயார்பண்ணி முடித்தார். சாப்பிடுவதற்கு முயற்சிபண்ணினார். வாயிலே வைக்க முடியவில்லை. என்ன பண்ணுவதென்று விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். வெளியிலே போயிருந்த சம்சாரம் திருப்பி வந்தாள். நடந்ததைப் புரிந்து கொண்டாள.

''ஏன்! சமைத்ததைச் சாப்பிட வேண்டியதுதானே சும்மா அதை ஏன் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள்''? என்று கேட்டாள். இவர் ''புத்தகத்தில் சமைத்துப் பார் என்று தான் போட்டிருக்கிறது. சாப்பிட்டுப் பார் என்று போடவில்லை; அதனால் வெறுமனே சமைத்து, அதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறேன்'' என்று சமாளித்தார்,

இவற்றை எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், படிப்பு முக்கியம்தான்...இருந்தாலும் அனுபவம் அதை விட முக்கியம். இந்தக் காலத்தில் படிப்பாளிகள் பலர் அனுபவசாலிகளுக்குக்கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பதில்லை.

ஒரு ஆற்றில் வெள்ளப் கரைபுரண்டு ஓடிக் கொண்டு இருக்கிறது. ஓடத்திலே ஏறி அக்கரைக்குப் போவதற்காக ஒருவர் காத்துக் கொண்டிருந்தார். அவர் மிகவும் படித்தவர். அது மட்டுமல்ல, அதிகமாகப் படித்திருக்கிறோம் என்கின்ற நினைப்பும் உள்ளவர். ஓடம் வந்து சேர்ந்தது' ஏறி உட்கார்ந்தார்; ஓடக்காரன் தள்ள ஆரம்பித்தான். தண்ணீரில் மிதந்து போய்க் கொண்டிருக்கிறது ஓடம், இவர் மெதுவாக அந்த ஓடக்காரனிடம் பேச்சுக் கொடுத்தார்.

''என்ன தம்பி! நீ இதிகாசங்கள் படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். இவர் படித்திருக்கிறாராம். அதனால் கேட்டார். ''இல்லை'' என்றான் ஓடக்காரன். ஐயோ பாவம்! உன் வாழ்க்கையில் $\frac{1}{4}$ வாசியை நீ வீணாக்கி விட்டாயே! என்றார். ஓடக்காரன் கவலைப் படாமல் ஓடத்தைச் செலுத்துவதிலேயே கவனமாக இருந்தான். இவர் மறுபடியும் 'என்ன தம்பி ... நீ புராணங்களாவது படித்திருக்கிறாயா? என்றுகேட்டார் அவையொன்றும் படிக்கவில்லை ஐயா! என்றான் அவன். ஐயோ பாவம்! உன் வாழ்க்கையில் அரைவாசியைவீணாக்கி விட்டாயே' என்றார்.

கொஞ்சநேரம் ஆனது இவர் மறுபடியும், ஏனப்பா... நீ இலக்கணம் இலக்கியம் எதுவுமே படிக்கவில்லையா?' என்று கேட்டார். 'படிக்கவில்லை ஐயா! என்றான் அவன், ஐயோ பாவம் உன்வாழ்க்கையில் முக்கால் பகுதியை வீணாக்கி விட்டாயே' என்றார். ஓடம் இப்போது நடுஆற்றிலே போய்க்கொண்டிருக்கிறது. திடீரென்று ஒரு சுழல். ஓடம் அதிற்சிக்கி மூழ்க ஆரம்பித்து விட்டது'

இப்போது அந்த ஓடக்காரன் இவரைப்பார்த்து 'ஏனையா பெரியவரே! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?' என்று கேட்டான். 'ஐயையோ தெரியாதே!' என்றார் ஐயோபாவம்! உங்கள் வாழ்க்கை முழுவதையும் இப்போது வீணாக்கி விட்டீர்களே! என்று சொல்லிக் கொண்டே ஓடக்காரன் ஆற்றிலே குதித்தான் கிடுகிடென்று நீந்திப் போய்க் கரை யேறிவிட்டான்.

இந்த இடத்தில், படித்த படிப்பு கரைசேர உதவவில்லை. அனுபவம் தான் உதவியிருக்கிறது; அதனால்... படிப்பு அனுபவத்துக்குமரியாதை கொடுக்க வேண்டும் என்பது என்னுடையவேண்டுகோள.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## மல்லாகம் பகுதியில் கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில், தீபாவளி தினமான நேற்று முன்தினம் இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலினால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது;

மல்லாகம் பழைய நீதிமன்ற வீதிப்பகுதியில் வசிக்கும் இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பிற்பகல் வேளை, மோதலாக உருவெடுத்தது.

பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தலையிட்டு மோதலை முடிவுக்குக் கொண்டுவந்தனர்;

இச் சம்பவத்தில் இருபெண்கள் உட்பட ஐவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது; (உ-5)

### யாழ். மாவட்டத்தில்

# மீன்பிடித்துறை அபிவிருத்திக்கு லோகாட் நிறுவனம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்துறையினை விருத்தி செய்வதில் மேற்கொள்ளப் படவிருக்கும் ஆராய்வுவேலைகளுக்கென லோகாட் நிறுவனம் 34 லட்சம் ரூபாவினை வழங்குகிறது அத்துடன் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் வேண்டுகோளிற்கு அமைய இரு நிபுணர்களின் சேவையையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

இதேவேளை, கடல்உணவுகளைப் பதனிடும் ஐஸ்நிலையங்களை இயங்கவைக்கவென இந்நிறுவனம் 2 கோடி ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளமையை அடுத்து இந்நிலையங்களை புனரமைக்கும்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (உ-10)

# இனந்தெரியாத நபர்கள் என்னை துரத்தித் துரத்தித் தாக்கினர்

## படுகாயமடைந்த இந்து மதகுரு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எனது பிள்ளைகளுக்கு தீபாவளிக்காக புத்தாடைகள் வாங்கிக் கொண்டு சைக்கிளில் நான் வந்துகொண்டிருந்த வேளை, இடையில் வழி மறித்த, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொல்லுகளால் தாக்கத் தொடங்கினர்;

பீதியுற்ற நான் சைக்கிளை விட்டு இறங்கி ஓடத் தொடங்கினேன். அப்போதும் என்னைத் துரத்தித், துரத்தித் தாக்கினர்.

யாழ்; போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வரும்,

வண்ணை கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதம குரு நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் (வயது 49) கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாவலர் வீதியில் வைத்து தனக்கு நடந்த துன்பியல் சம்பவம் குறித்து இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அவர்களது தாக்குதலின் கொடுமையால் நான் மயக்கமுற்ற பின்னர். நான் அணிந்திருந்த பெறுமதிவாய்ந்த தங்கநகைகளையும், 2 ஆயிரம் ரூபா பணம்மற்றும் 3ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்துவந்த புதியஉடுபுடவைகளையும் களவாடிச்சென்றுள்ளனர்.

எனக்கு எவரிடமும் தனிப் பட்டகுரோதம் கிடையாது. இதுகள்வர்களுடைய செயலாக இருக்குமென நான்கருதுகிறேன்என்று குறிப்பிட்டார், (உ-7 6)

## கத்திக்குத்துக்கு இருவர் இலக்கு

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினத்தன்றுஇடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவங்களில் படுகாயமடைந்த இருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ். நகர ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் ரா. சுதாகர் (வயது 25) என்பவரும், தாவடி கள்ளுத் தவறணையில் இடம்பெற்ற குழு மோதலில் ச. குலேந்திரன (வயது 27) என்பவருமே கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளனர். (உ-6

## மக்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம)

மிதிவெடி அல்லது வெடிக்காத வெடிபொருட்களினால் ஏற்படும் விபத்துக்கள் குறித்து தமக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. (உ)

## தொண்டர் ஆசிரியர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

குடா நாட்டில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளைவியாழக்கிழமை காலல 9.30மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில்இடம் பெறவுள்ளது. (உ-206)

## கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் கைகலப்பு

(ஏழாலை)

கசிப்பு ஒழிப்புக் குழுவினர் கடந்த ஞாயிறன்று ஏழாலை மத்தியில் மேற்கொண்டகசிப்பு ஒழிப்பு நடவடிக்கையின் போது ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்; (உ-206)

## விபுலானந்தர் வீதியில் முகாமிட்டிருந்த படையினர் அங்கிருந்து வெளியேற்றம்

(அரியாலை)

2000 ஆம் ஆண்டு முதல் கொழும்புத்துறை விபுலானந்தர் வீதிப்பகுதியில் உள்ள வீடுகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த ஞாயிறறுக்கிழமை அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் தங்கியிருந்த வீடுகள், வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன;

இதேவேளை அப்பகுதியில் இருந்த இராணுவ நிலைகள் யாவும் அகற்றப்பட்டு சுவாமியார் வீதிக்கு அவை மாற்றப்பட்டுள்ளன. (உ-225)

## வர்த்தகத் துறையில் கூடுதல் கவனம் தேவை

### அரசுக்கு வலியுறுத்து

(கொழும்பு)

வர்த்தக வாணிபத்துறையினை முன்னேற்றுவதற்கு அரசு கூடுதல்கவனமசெலுத்த வேண்டும்.

இவ்வாறு தேசியவர்த்தக சம்மேளனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை, வர்த்தக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 4 வர்த்தக சம்மேளனங்கள் ஏற்கனவே நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியை சந்தித்து நிவாரண நடவடிக்கை தொடர்பான தங்கள் யோசனையைச் சமர்பித்துள்ளதாக தேசிய வர்த்தக சம்மேளனங்களின் தலைவர் சந்திரா எம்புல்தெனியா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர்தெரிவிக்கையில்,

சிறு அளவினதானதும்நடுத்தர அளவினதானதுமான கைத்தொழில்களிற்குபோதிய நிவாரணங்கள் கிடைக்கும் என வர்த்தக சம்மேளனம் எதிர்பார்க்கிறது.

பொருளாதாரத்தில்மேலும் அடிப்படை கட்டமைப்புக்கள், மாற்றங்கள் ஆகியன அவசியம் என்று எம்புல்தெனியா குறிப்பிட்டார். (உ-10)

## குடாநாட்டு கடல் உணவுகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக் கடலில் தற்போது எந்நேரமும் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவதால், கடலுணவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆலோசித்து வருகின்றது.

இது குறித்து சமாசத் தலைவர் இ. தவரட்ணம் கருத்துக் கூறுகையில்;

தேவைக்கும் அதிக கடல் உணவுகளை பாதுகாப்பாக வைக்கக் கூடிய வசதிகள் இன்னமும் இங்கு ஏற்படவில்லை;

இங்கு பிடிக்கப்படும் சங்கு, சிங்கிறால், இறால், கடல் அட்டை போன்றவற்றை அவ்வப்பகுதி மீனவர் சங்கங்களூடாக கொள்வனவு செய்து, தென்பகுதி மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது என்றார்;

மீனவர்களின் வாழ்க்கைத் தரமேம்பாட்டுக்கு இந்நடவடிக்கை பேருதவியாக இருக்குமென நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ-6)

# நயினையில் வைத்தியர் இல்லா வைத்தியசாலை

## நோயுற்ற மக்களோ வழிதெரியாது பரிதவிப்பு

கோயிலுண்டுகோபுரமுண்டு கும்பிடத் தெய்வம் இல்லை என்பது போல நயினாதீவில் வசதியுடன் வைத்தியசாலை இருக்கின்றது ஆனால் வைத்தியம் செய்ய வைத்தியர் இல்லை சிலவருடங்களாக வைத்தியர் இல்லாமல் நயினாதீவு மக்கள் பெரும் சிரமத்தையும் துன்பத்தையும் அனுபவித்து வருகின்றார்கள். முன்பெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்டவைத்தியர்கள்கடமையாற்றிய இவ்வைத்தியசாலையில்இன்றுஒருவரும் இல்லை என்ற நிலையுருவாகி விட்டது. யாழ். தொடர்பு துண்டிக்கப் பட்டிருந்தகாலத்தில் கூட பெயருக்காவதுஒரு வைத்தியர்கடமையாற்றினார். அவசர நோயாளர்கள்திருகோணமலை, அநுராத புரம் போன்ற இடங்களிலுள்ளவைத்தியசாலைகளுக்குஅனுப்பப்பட்டுவைத்தியம் மேற்கொள்ளப்பட்டது. இன்று ஆஸ்பத்திரியில் வைத்தியர் இல்லாமையால் பல மனித உயிர்கள் அநியாயமாக இறந்து போகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

### வேண்டுகோள்கள் பயனளிக்கவில்லை

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டபின் பிரதமமந்திரிமுதல் பல அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் நயினாதீவிற்கு வருகைதந்து சென்றுள்ளனர். அவர்களிடம் ஆஸ்பத்திரிக்கு டாக்டர் ஒருவரை நியமிக்குமாறுஇங்குள்ளபொதுஅமைப்புகளால்வேண்டுகோள் விடுக்கப்பட்டு கடிதங்களும் கையளிக்கப்பட்டன. வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்ட கடிதங்கள் கூட எமக்குக் கிடைத்தன; ஆனால் வைத்தியர் ஒருவர் நியமிக்கப் படவில்லை.

**நயினை**

**நா. கோபாலகிருஷ்ணன்**

அண்மையில் சிங்களப் பத்திரிகையாளர் சிலரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் சொன்னவார்த்தைகள் நயினாதீவின் குறைபாடுகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவைகள் என்பதாகும். ஏனென்றால் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் நயினாதீவைச் சாட்டாக வைத்து (நாகதீபத்தை)யாழ். பயணத்தை மேற்கொள்கின்றனர். இப் பிரயாணத்தின் மூலமாக யுத்தச் சுவட்டின் கோர வடுவையும் தமிழ் மக்களின் துன்பம் நிறைந்த துயர வாழ்வையும் அவர்கள் கடந்த காலங்களில் எப்படியான அவல வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதையும் நேரடியாக அறியக் கூடியதாக இருக்கின்றது. எனவே நயினாதீவை (நாகதீபத்தை) மையமாக வைத்து, சிங்கள மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற யாத்திரை சுற்றுலா மூலமாக சமாதானத்தின் அவசியத்தை தென்னிலங்கைச் சிங்கள மக்களின் சிந்தையில் சிந்திக்க வைத்துள்ளது. எனவே நயினாதீவின் குறைபாடுகள் தீர்க்கப்படுவதற்கு தங்களால் முடிந்ததைச் செய்வோம் என்றார்கள்.

### வைத்தியர் இல்லாமல் பயன் ஏது?

நயினாதீவில் உள்ள வைத்திய சாலைக்கு அவ் வைத்தியசாலையின் தரத்திற்கு ஏற்றவாறாக ஒரு வைத்தியர் உடனடியாக நியமிக்கப் படவேண்டும். இங்குள்ள வைத்திய சாலையில் வைத்தியர் இல்லாமையால் அண்மைக் காலங்களில் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக இரு வாரங்களின் முன் நிகழ்ந்த ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் மரணம் இங்குள்ள ஆஸ்பத்திரியில் வைத்தியர் ஒருவர் இல்லாமையால் ஏற்பட்ட மரணமாகவே கருத வேண்டியுள்ளது. மேற்படி ஓய்வு பெற்ற அதிபருக்கு முதல் நாள் மாலை சிறிதாக நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது ஆஸ்பத்திரியில் வைத்தியர் இல்லாமையால் கை வைத்தியம் வீட்டில் வைத்து செய்துள்ளனர். மறுநாள் காலை சாதாரணமான நிலையில் பிரயாணத்தைமேற்கொண்டவர் வாகனத்தில் இருந்தவாறே மரணமடைந்தார். அவரின் உடல் நிலை அபாய கட்டத்தில் உள்ளது என்பதை அறிவுறுத்த ஆஸ்பத்திரியில் வைத்தியர் ஒருவர் இருந்திருந்தால், அவரின் ஆலோசனைப்படி முதல் நாள் மாலையே, யாழ் ஆஸ்பத்திரியில் சேரக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பார். நயினாதீவு ஆஸ்பத்திரியில் இருதயத் துடிப்பை அறியக் கூடிய கருவி கூட அன்பர் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வைத்தியர் இல்லாமையால் செயல்படாமல் உள்ளது. எனவே, வைத்தியர் இல்லாத வைத்திய சாலையால் மக்களிற்கென்ன பயன்.

## ஜே. வி. பி. யுடன் கூட்டுச் சேர சிஹல உறுமய தயார்

(திருகோணமலை)

பொதுஜன ஐக்கிய முன்னணியுடனோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியுடனோ கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக சிஹல உறுமயவின் தலைவர் திலக்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலொன்றுதற்போதைக்கு அவசியமற்றது எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

(உ)

## மூலச்சான்றிதழ் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த காலங்களில் பயிற்சி பெற்ற ஆசிரிய மாணவர்களது மூலச் சான்றிதழ்கள் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதால், 1993/1994, 1994/ 1995, 1996/1997, 1997/ 1998, 1998/ 1999 கல்வி ஆண்டுகளில் பயிற்சியை மேற்கொண்ட சகல ஆசிரியர்களும் தேசிய அடையாள அட்டையுடன் எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை9.00மணிக்கும் 12.00 மணிக்குமிடையில் கலாசாலைக்குச் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறும் எக்காரணம் கொண்டும் முகவர்கள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப் படமாட்டாது எனவும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(உ)

# ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்க

## அமெரிக்காவும் விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இம் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கின் மனிதாபிமானமற்றும் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாகஇம் மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு அமெரிக்கா தூதரகம் மூலம் தனது இவ் விருப்பத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இம் மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் இலங்கைக்கு எமது உதவிதொடர்ந்தும் கிடைக்கும்.

சமீபத்தில் இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில்நடைபெற்ற 2 ஆம் கட்ட பேச்சு வார்த்தையின் பெறுபேறுகளை அமெரிக்கா மிக அவதானமாகஆய்வு செய்து மதிப்பிட்டு வருகிறது.

இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நிறுத்தத்தையும் இலங்கை அரசு சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வது பற்றி உறுதியாக இருப்பதையும் இட்டு அமெரிக்கா பாராட்டாதிருக்க முடியாது என்றுள்ளது.

இதேவேளை, இராணுவ நடவடிக்கைகளை தவிர்த்து அரசியல் விவகாரங்களுக்கான உபகுழுக்கள் அமைக்கப்படும் என்ற தீர்மானத்தையும் வாஷிங்டன் வரவேற்றுள்ளது.

(உ-10)

## அனுமதிப் பத்திரம் பெறாத சுமார் 12 ஆயிரம் பேர் கார் செலுத்துகின்றனர்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் பெறாத சுமார் 12 ஆயிரம் பேர் கார்களைப்பயன்படுத்திவருவதாக பொலிஸ் வாகன போக்குவரத்துப் பிரிவினர் நடத்திய மதிப்பீடுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

நாட்டில சுமார் 18 லட்சம் வாகனங்கள் உள்ளன. இவற்றில் 2 லட்சத்து 41 ஆயிரத்து 341 கார்கள் உள்ளன. நாட்டில் நாளுக்கு நாள் வாகனங்களின் பாவனை அதிகரித்து வருவதால் சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்காமல் வாகனங்களை செலுத்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களுக்கு இதுவும் ஓர் முக்கிய காரணம் எனவும் இப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

(உ-7)

## கந்தசஷ்டி பெரு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கருங்காலி போசுட்டி ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்கந்தசஷ்டி பெருவிழா நேற்று ஆரம்பமானது.

தொடர்ந்து தினமும் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சூரன் போரும் மறுநாள் திருக் கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது.

(உ)

## பஜனை

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலடி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பிரசாந்தி நிலையத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி முதல் 6.00 மணி வரை பஜனை இடம்பெறவுள்ளது.

(உ)

## ஸ்ரீ. சு. கட்சிக்குள் விரைவில் ஆட்களைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் புனரமைக்கும்நோக்கில் அக்கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் சுமார் 40 பேர் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இது குறித்த முடிவை கட்சியின் தலைமைப்பீடம் எடுத்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இதில் அடங்குவர் எனவும்;

வெற்றிடமாகும் இடங்களுக்கு தலைமைப்பீடத்திற்கு நெருக்கமான விசுவாசம் மிக்கவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

(உ)

## மத்தியகல்லூரி மாணவருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்தியகல்லூரி ஊடாக க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு 2 ஆம் தடவையாக விண்ணப்பிக்கும் சகல மாணவர்களும் தொண்டைமானாறு வெளிக்களநிலையம் நடாத்தும் பொதுப்பரீட்சைக்கு தோற்ற வேண்டும்எனவும்,

அவ்வாறு 2 ஆம் தடவையாக கல்லூரியூடாக விண்ணப்பிப்போரை நாளை மு. ப. 10.00 மணிக்கு கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறும் மேற்படி பரீட்சைக்கு தோற்றாத எந்தவொரு மாணவரும் கல்லூரியால பரீட்சைஎழுத அனுமதிக்கப் படமாட்டார்கள் எனவும் கல்லூரிஅதிபர் க. இராசதுரை அறிவித்துள்ளார்

(உ-10)

## ஜப்பான் பிரதிநிதிகள் நாளை யாழ் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிகளுக்குப் பொறுப்பான ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி மெக்சிக்கோ ஒட்சுகா, ஜப்பான் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி ஐசுக்கி, ஜகிகாசி ஆகியோர் நாளை இருநாள் விஜயமாக, யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இவர்கள் நாளைய தினம் பி.ப 3.00 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி போர் அழிவுகளைப் பார்வையிடவுள்ள இவர்கள், யாழ் குடாநாட்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் மனிதாபிமானப் பணிகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

(உ-6)


வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

**2003 ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் திருத்தம்**

மேற்படி விடயம் தொடர்பாக 02. 11. 2002 ம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி 14. 11. 2002 பிற்பகல் 2.00 மணிவரை எனவும், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய திகதி 15. 11. 2002 பிற்பகல் 2.00 மணிவரை எனவும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி 15. 11. 2002 பிற்பகல 3.00 மணி எனவும் திருத்தி வாசிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

க. கமலசேகரன்
ஜே. பி. யு. எம்.
தலைவர், வலிகாமம் தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம்.

வலி. தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
2002. 11. 05.

(C-5213)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை -2002

## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002


கணிதம்- 1
ஒரு மணித்தியாலம்

ஆக்கம்: திரு.சச்சிதானந்தம்
அதிபர்
(நடேஸ்வராக் கல்லூரி)

(வினா 1 - 10 வரை                1X10= 10 புள்ளிகள்)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. சுருக்குக : $0.3 \times 0.3$
2. $\sqrt[3]{8}$ இன் பெறுமதி காண்க.
3. சுருக்குக : 5 - (- 4) - 6
4. $101111_{\text{இரண்டு}}$ என்னும் எண்ணிற்கு அடுத்துவரும துவிதஎண்யாது?
5. சுருக்குக : $\frac{3}{5} - \frac{1}{2}$
6. 0.04962 என்னும் எண்ணை இரு பொருளுடைய இலக்கங்களிற்கு மட்டந்தட்டுக.
7. 58 m I km இற்கு மாற்றுக.
8. ஒழுங்கான அறுகோணி வடிவிலமைந்த **ABCDEF** என்னும் போல்ட் ஆணியை எத்தனை பாகையால் சுழற்றும்போது **A** ஆனது **B** யின் நிலைக்கு வரும் ?





9. சுருக்குக : $ab + 2.3\,xy - 3.4\,yx + 2ba$
10. 0.00745 என்னும்எண்ணை விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக.

வினா 11 - 20 வரை


11. பின்வரும் மடக்கை எண்களைச் சுருக்கி எழுதுக:
**2.4750 – □.3600**
12. ஒரு வானொலிப் பெட்டியின் விலை ரூ. 2000 உடன் $12\frac{1}{2}\%$ வற வரியும் செலுத்தப்படவேண்டும் எனின் வானொலிப் பெட்டியின் மொத்தப் பெறுமதியைக் காண்க.
13. ஒரு புகையிரதம் 5 மணிநேரத்தில் சராசரியாக 65 km / h என்னும் வேகத்துடன்பிரயாணம் செய்தது.இப்பிரயாணத்தில் முதல் 3 மணிநேரத்திலும் அதன் சராசரி வேகம் 55 Km/h எனின கடைசி 2 மணிநேரத்தினதும் சராசரி வேகத்தைக் காண்க.
14. காரணிப்படுத்துக : $(x-5)^2 - 1$
15. $t = a + (n-1)d$ இல் n ஐ எழுவாயாக மாற்றுக.
16. மடக்கை அட்டவணையை உபயோகியாது சுருக்குக :

$$\frac{\log 27}{\log 3}$$


17. அருகேயுள்ள சரிவகம் **ABCD** யில் **DC = 17 cm , AX = 10 cm ,** அதன் பரப்பளவு $125\ cm^2$ எனின் **AB** யின் பக்க நீளத்தைக் காண்க





18. ஒரு கூட்டல் விருத்தியின் **n** வது உறுப்பு $2-3n$ ஆகும். அத்தொடரின் அ) பொது வித்தியாசம் யாது?
ஆ) முதலுறுப்பு யாது ?
19. தரப்பட்ட வட்டத்தில் நிழற்றப்பட்ட பகுதி முழு வட்டத்தின் என்ன பின்னமாகும்?




20. ஏறு நிரைப்படுத்தி எழுதுக:
$5 , 0.5 , (0.5)^2 , 5^2 ,$
21. $A = \{2,3,5,7\}$ , $B = \{2,4,6,8,10\}$ , $C = \{1,3,5,7,9\}$, $D = \{3,7,5,2\}$ எனின்
அ) சமனான தொடைகள் எவை?
ஆ) சமவலுத் தொடைகள் எவை?
22. $y = 3 - 5x$ என்னும் நேர்கோட்டிற்குச் சமாந்தரமாக **(3 , 5)** என்னும் புள்ளியினூடாகச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட் டைக் காண்க.
23. அருகேயுள்ள உருவில் வட்ட மையம் **O** ஆகும் $\hat{AOD}$ எனின் பின்வருவனவற்றைக் காண்க.
அ) $\hat{BAO}$        ஆ) $\hat{ACB}$




24. ஒருவன் வருடாந்தம் 12% வருமானம் கொடுக்கும்ரூ.15 பங்குகளை ரூ. 20 வீதம் வாங்குவதற்கு ரூ. 3000 ஐமுதலீடுசெய்கின்றான்.
அ) அவன் வாங்கிய பங்குகள் எத்தனை?
ஆ) அவன் வருடாந்தம் பெறும் வருமானம் எவ்வளவு?
25. ஒரு சாய் சதுரத்தின் ஒரு பக்க நீளம் **26 cm**, ஒரு மூலை விட்டத தின் நீளம் **20 cm** எனின்மறு மூலை விட்டத்தின் நீளத்தைக் காண்க.
26. ஒரு கோளவடிவான பலூன் ஒன்றின் கொள்ளளவு $V\ cm^3$ ஆகும். அந்த பலூனின் விட்டம் இருமடங்காக அதிகரிக்கும்போது அதன் கொள்ள ளவைக் காண்க.
27. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி $\sqrt{237 \times 221}$ இன் பெறுமதியைக காண்க.
28. **25 m** நீளமான ஒரு கம்பியிலிருந்து $1^1/_3$**m** நீளமான எத்தனை கம்பித துண்டுகள் வெட்டலாம்? மீதித் துண்டின் நீளம் யாது?
29. தேங்காய்களின் விலை **10%** குறையும் போது ரூ.480 இற்கு 4 தேங்காய்கள் கூடுதலாக வாங்க முடிந்தது எனின் விலை குறைந்தபின் ஒரு தேங்காயின விலையைக்ககாண்க.
30. அருகே உள்ள உருவில **p , q** ஆகியவற்றின் பெறுமதியைக் காண்க.





**கணிதம் II**                **நேரம் : 3 மணி.**


**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் யாதாயினும் 7 வினாக்களுக்குமாக மொத்தம் எட்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

1. a)ஒரு செவ்வகத்தின நீளம் x அலகுகள் ஆகும் அதன் அகலம், நீளத்தி லும 5 அலகுகள் குறைவாகும்.அதன் நீளத்தை 6அலகுகளாற் கூட்டி, அகலத்தை 3 அலகுகளாற்குறைத்தால் வரும் செவ்வகத்தின் பரப்பளவு முன்னைய செவ்வகத்தின் பரப்பளவிற்குச் சமனாகும். இவற்றிற்கான ஒரு சமன்பாட்டை அமைத்துத் தீர்ப்பதன்மூலம் செவ்வகத்தின் நீள, அகலங்களைக் காண்க.
b) 20% இலாப நோக்கத்துடன் மணிக்கூடு ஒன்றின் விலை ரூ. 720 என ஒரு வியாபாரி விலை குறிக்கின்றார்.
i) மணிக்கூட்டின் கொள்விலையைக் காண்க.
ii) உடன் பணத்திற்கு விற்கும்போது குறித்த விலையில் 10% கழிவு கொடுக்கின்றார். எனின் விற்கும் விலையைக் காண்க.
iii) அவர் இதனாற் பெறும் இலாப வீதத்தைக் காண்க.
c)
i) 12 வது ஒற்றை எண் யாது?
ii) முதல் 12 ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
iii) இது எத்தனையாவது சதுர எண்ணாகும் ?
iv) முதல் 20 ஒற்றை எண்களைக் கூட்டவரும் சதுர எண்ணைக் காண்க.

d) அருகே உள்ள உருவில் பின்வரும் கோணங்களின் பெறுமதியைக் காரணங்களுடன் தருக.
i) $\hat{ABC}$    ii) $\hat{APR}$
iii) $\hat{BPQ}$    iv) $\hat{PQR}$




e) ஓர் உறையினுள் உள்ள ஒரேயளவான 12 பந்துகளில் x பந்துகள பச்சை நிறமுடையன.
i) இவற்றுள் ஒன்றை எழுமாற்றாக எடுக்கும்போது அது பச்சை நிறமுடையதாக இருப்பதற்கானநிகழ்தகவைக் காண்க.
ii)இதனுள் இன்னும் அதேயளவான 8 பச்சை நிறப் பந்துகள் இடப்படின பச்சை நிறப்பந்தைப் பெறுவதற்கான நிகழ் தகவு $^4/_{15}$ இனால் அதிகரித்தது. x இல் ஒரு சமன்பாட்டை அமைத்துத் தீர்ப்பதன் மூலம் x ஐக் காண்க.
f) அருகேயுள்ள வெண்ணுருவில் A,Bஎன்பன ஒன்றையொன்று இடைவெட்டும இரு தொடைகளாகும். ஒவ்வொரு பகுதியிலுமுள்ள மூலகங்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளன.
இங்கு $n(A) = n(B)$ எனின் பின்வருவனவற்றைக் காண்க.




i) $n(A)$   ii) $n(B)$   iii) $n(A \cup B)$   iv) $n(A \cap B)$

(தொடரும்...)

## விவசாய விஞ்ஞானம் பகுதி 2 இன் தொடர்ச்சி.................................

2. 1. களை என்றால் என்ன? (1 புள்ளி)
2.களைகளினால் ஏற்படும் தீமைகள் நான்குதருக.(1/2 x 4 = 02)
3. பொறிமுறைக் களைகட்டல் முறைகள் நான்கு தருக. (1/2 x 4 = 02)
4. உணவு உண்ணும் அடிப்படையில் பூச்சிகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் தருக. (1/2 x 4 = 02) (1/2 x 4 = 02)
5. பயிர்களுக்கு நோயுண்டாக்கும் காரணிகள் எவை? (1/4 x 4 = 01)

3. 1. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையின் அனுகூலங்கள் 6 தருக. (1/2 x 6 = 03)
2. சீரற்ற நீர்வடிப்பினால் பயிர்களுக்கு ஏற்படும் தீமைகள் நான்கு தருக. (1/2 x 4 = 02)
3.மண்ணுக்கு இடப்படும் சேதனப் பசளை வகைகள் 4 தருக. (1/2 x 4 = 02)
4. சேதனப் பசளை இடுவதால் ஏற்படும் நன்மைகள் 6 தருக. (1/2 x 6 = 03)

4. 1. நாற்று மேடைக்கு இடம் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய இயல்புகள் 6 தருக. (1/2 x 6 = 03)
2. நாற்று நடுவதனால் ஏற்படும் நன்மைகள் 6 தருக. (1/2 x 6 = 03)
3. பதியமுறை இனப் பெருக்கத்தின் அனுகூலங்கள் 4 தருக. (1 x 4 = 04)

5. 1. தரை பண்படுத்தல் என்றால் என்ன? பண்படுத்தல் எத்தனை வகைப்படும் அவை எவை? ( 2+1+1/2 x 2 = 04)
2. பண்படுத்தலினால் ஏற்படும் நன்மைகள் 6 தருக. (1/2 x 6 = 03)
3. பண்படுத்தலில் விலங்குவலுவும் இயந்திரவலுவும் பயன்படுத்தப்படுவதை ஒப்பிட்டு நோக்குக. (3 புள்ளி)

6. 1. விலங்குகளுக்கு மனை அமைக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை? (3 புள்ளி)
2. விலங்கு மனைகளை அமைப்பதன் பிரதான நோக்கங்கள் எவை? (3 புள்ளி)
3. பாலைப் பேணிப் பாதுகாக்கும் முறைகளை உதாரணத்துடன் தருக.(4 புள்ளி)

7. 1. செயற்கை முறையில் கடும்புப் பால் தயாரிக்கத் தேவையான பொருட்கள் எவை. (2 புள்ளி)
2. கோழிக் குஞ்சுத்தீன் கலவை பங்கீடு ஒன்று தயாரிக்கவும். (4 புள்ளி)
3. மாடுகளைப் பாதிக்கும் ஒரு நோயைக் குறிப்பிட்டு அதன் காரணி அறிகுறி, தடுப்பு முறை, சிகிச்சை ஆகியவற்றை விபரிக்குக. ( 1/2+1/2 +1+1+1 = 04)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் காங்கிரஸே காரணம்

### முஸ்லிம் அரசியல் உரிமைக்கான செயற்பாட்டுமுன்னணி அறிக்கை

(அம்பாறை)

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மாற்றியமைப்பே காரணமாகும். ஆட்சியில் அமர்த்தப்பட்ட ஐக்கியதேசியக்கட்சி தமிழ்மக்களின் உரிமையை வழங்குவதற்காக மும்முரமாகச் செயற்படுகின்ற போது முஸ்லிம்மக்களைப் புறக்கணிப்பது வேதனையை ஏற்படுத்துகிறது;

இவ்வாறு முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைக்கான செயற்பாட்டு முன்னணி எனும் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான பெரும்பங்களிப்பை பாராளுமன்றம் ஊடாக ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கு வழங்கியது முஸ்லிம்காங்கிரஸே;

முஸ்லிம்மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் 15நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் இவர்களில் 12நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே முஸ்லிம்மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும். முஸ்லிம்மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதை இனி ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-I5)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர்மணிமண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி ப 5. 30மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவு (தொடர்- 13) இடம்பெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை அருட்சொல்வாரி சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் ''சூன்போரும் நாமும்'' என்னும் தலைப்பில் நிகழ்த்துவார்.

இதேவேளை நாவலர் மண்டபத்தில் இடம்பெற்று வரும் பண்ணிசை வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்களில் சொற்பொழிவாற்ற விரும்பும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

(த)

# தலைவர் பிரபாவுக்கு வழங்கிய தீர்ப்பைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் இன்று மட்டக்களப்பில் இடம்பெறும்

(மட்டக்களப்பு)

மத்தியவங்கித் தாக்குதல் தொடர்பாக தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஆட்சேபித்து இன்று மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டப்பேரணி இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தி மேம்பாட்டுக்குழு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியன இணைந்து நடத்தும் இக்கண்டனப் பேரணி காலை 9.30 மணிக்கு கோட்டைமுனை இந்துக்கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பித்து திருமலைவீதி, கோட்டைமுனை பாலத்தினூடாக காந்திசதுக்கத்தை அடையவுள்ளது.

முடிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகியோருக்கு மட்டக்களப்பு அரசஅதிபரூடாக மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன

(உ)

## 'துலக்கம்'' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுமகாவித்தியாலய துலக்கம் நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10. 00 மணிக்கு, பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் க. தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், தீவக பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ- 5)

## புலிகளைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலை கடற்பரப்பில் கடந்த சனியன்று வைத்து கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் 6பேரையும் பிணையில் விடுவிக்கும் வகையில் கொழும்பில் மேன்முறையீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இவர்களுக்கான பிணை விண்ணப்பத்திற்கு பொலிஸார் தரப்பில் ஆட்சேபம் இருக்காதுஎனவும் இதுவிடயத்தை சுமுகமாகத் தீர்க்க தாம் முயன்றுவருவதாகவும் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

(உ)

## ஐ. தே. மு. அரசின் 2வது வரவுசெலவுத்திட்டம் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியினரால் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டம் சம்பளஉயர்வுமற்றும் வேலைவாய்ப்புக்களை அதிகரித்து உற்பத்திகளை ஊக்குவிக்கும் விதக்தில் அமைந்துள்ளதாக நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்தார்.

மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலமைந்துள்ளது என்றும் இதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள்ஏற்படும்என்றும் உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் நிதி அமைச்சர் கே. என்.சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மக்களின் வாழ்க்கைச்செலவை குறைக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இவ்வருடம் அரசாங்கம் ஆரம்பித்து வைத்துள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் இன்னும் 8மாதங்களிற்குள் நிறைவுசெய்யப்படும்எனவும்,

வறுமை ஒழிப்பு கிராமிய மட்ட அபிவிருத்திப் பணிகளை இலக்காக கொண்ட பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும்,

இத்திட்டங்கள் மூலம் அதிகம் லாபம் ஈட்டக்கூடிய நவீன கைத்தொழில், விவசாய சுயதொழிற் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு போட்டி போடும் நிலை மாற்றப்பட்டு பாரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(உ- 10)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் நால்வர் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஒழிக்கப்பட்ட கல்வி, கலாசார மனித வள அபிவிருத்தி அமைச்சுக்கு நான்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாயகங்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது;

கல்வி அமைச்சின் வெளிநாட்டு வளங்களுக்கு பொறுப்பான பணிப்பாளராக கடமையாற்றிய எம். டி தயாரத்ன கொள்கை திட்டமிடல் வெளிநாட்டு வளங்களுக்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் நாயகமாகவும்,

ஆசிரிய கல்விக்கல்லூரிகளுக்கு பொறுப்பான ஆணையாளராக கடமையாற்றிய ஏ.சீ.எம். இப்றாஹீம் ஆசிரியர் கல்வி தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகமாகவும், வடமத்திய மாகாணகல்விக் காரியாலயத்தில் கடமையாற்றிய திருமதி டபிள்யு.பீ. பஸ்நாயாக ஆசிரிய கல்வி தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகமாகவும்.

தென்மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எம் வீரதுங்க பாடசாலை கல்வி பாடவிதான பிரதிப்பணிப்பாளர் நாயகமாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

(உ-3)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக இந்து மாநாடு பற்றிய ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 14ம்திகதி வியாழக்கிழமை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, மண்டபத்தில் பி. பகல் 3 00 மணிக்கு இடம் பெறவுள்ளது இந்தக்கூட்டத்தில் இந்து சமய ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு இந்துகலாசார அமைச்சு அலுவலகம் கேட்டுள்ளது;

(உ–6)

புளக் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் விற்பனைக்குண்டு

★ சின் சீற் (Zine Sheet)

★ கமரா

★ இரசாயனப் பொருட்கள்

★ Litho Film

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

வலம்புரி

இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

### பிந்துனுவெவ புனர்வாழ்வுமுகாம் படுகொலை வழக்கில்

# பொய்ச் சாட்சியளித்த அதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவபுனர்வாழ்வு முகாம் படுகொலை தொடர்பாக பொய்ச்சாட்சி கூறியகுற்றத்திற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்ட பண்டாரவளை பிந்துனுவெவ சமூக அபிவிருத்தி அதிகாரி காமினி விஜயசூரிய நேற்றுமீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றில் சாட்சியமளித்தார்;

மனுதாரர் சார்பாக நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளித்த அவர் கடந்தவிசாரணைகளின் போதுதாம்பொய்ச்சாட்சியம் அளித்ததாகவும் தொலைபேசிமூலமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்தே தாம் பொய்ச்சாட்சியமளித்ததாவும் கூறினார்.

இதேவேளை புனர்வாழ்வு முகாம் படுகொலைச் சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக நீதிமன்றத்தினால் அழைப்பானை விடுக்கப்பட்ட 13பேர் நேற்று ஹட்டன் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்;

இவர்களில் இலங்கைத் தொழிலாளர் ஐக்கியமுன்னணியின் உபதலைவர் கணபதி கனகராஜ்,முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களான இரத்தினராஜா, அருளப்பன் ஆகியோரும் அடங்குவர்;

2000ஆம் ஆண்டுஒக்டோபர்மாதம் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பொகவந்தலாவ நகரில் கண்டன ஊர்வலம் நடத்தியமை பிரதேசத்தின் சுமுகநிலையை சீர்குலைத்தமை சிங்களமக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது பொலிஸாரால் சுமத்தப்பட்டுள்ளது;

சந்தேக நபர்கள் அனைவரும் தலா 25ஆயிரம்ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் எதிர்வரும் ஜனவரிமாதம் 14ந்திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறும் ஹட்டன் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(த)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவக வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மொழித்திறன் விருத்திச் செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 8ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பி. பகல் 4-15 மணி வரை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் தரம் 6இல் இச்செயற்றிட்டத்தில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு மாவட்ட மட்டத்திலான தொழித்திறன் இறுதி மதிப்பீடு எதிர்வரும் 12ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை

குறள்

# வலம்புரி

## புத்தம் சரணம்

இலங்கையில் கடந்த இருபது வருடகால யுத்தத்திக்கு எண்ணெய்விட்ட பெரும் பங்கு பௌத்த பீடங்களையும், பௌத்த பிக்குகளையும் சாரும்.

எதற்கெடுத்தாலும் இனவாதம் கக்கும் பௌத்த பிக்குகள், 83 இனக்கலவரத்தை அரங்கேற்றிவைத்து மகிழ்வடைந்தனர். பிறஉயிர்களுக்கு இம்சை செய்யாதுருகக வேண்டுமென்ற உயரிய கோட்பாட்டை இலக்காகக் கொண்ட புத்தபிரானின் போதனையை கடைப்பிடிப்பதாக கூறிக்கொள்ளும் புத்தபிக்குகள், 83 கலவரத்தில் தமிழர்கள் உயிரோடு எரிக்கப்பட்ட போதுவேடிக்கை பார்த்தனர். தமிழினம் சிங்களவர்களுக்கு அடிமை என்ற கருத்தை ஒவ்வொரு ஆட்சியாளர்களுக்கும் இடித்துரைத்தனர்.

பொஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் உத்தேச அரசியல் யாப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாராளுமன்றத்தில் கொண்டுவந்தபோது அந்த அரசியல்யாப்பு தமிழர்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்த பிககு ஒருவர் நடு வீதியில் குந்தியருந்து உண்ணாவிரதமிருநதார். இப்படி புத்தம் சரணம் கச்சாமி என்று ஓதுகின்ற புத்தபிக்குகள் ஈழததமிழர்களின் பார்வையில் ஏதோவொரு வகையான கச்சாமிஆகவே காட்சியளித்தனர்.

என்னதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டாலும அதற்கு பௌத்தபிககுகள் விடமாட்டார்கள் என்ற கருத்து தமிழர்களிடம் ஆழமாகப் பதிந்துவிட்ட நிலையில், அரசும் விடுதலைப்புலிகளும் தாய்லாந்தில் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகுறித்து அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். அவர்களின் மகிழ்ச்சியை அளவிடும் கருவி தமிழர்களிடம் இல்லையாயினும்,

அப்பாடா, இப்போதாவது போதிமரத்துப் போதகன் அவர்களுக்கு ஞானத்தை உபதேசித்தானே என்ற மனநிறைவை அடையமுடிகின்றது.

அவ்வகையில் அஸ்கிரிய மல்வத்த பீடாதி பதிகளின் மகிழ்ச்சி அவர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் குழப்பமாட்டார்கள் என்ற நம்பிக்கையைத்தருகிறது.

# ஆசைகள், கற்பனைகள் மனதில் படமாகவிரிந்து ஒரு முகப்படுத்தப்படில் சாதனைகளாகின்றன.

**டாக்டர் எம் எஸ். உதயமூர்த்தி**

சாதனைகளை நிகழ்த்துவது எப்படி? விரும்பிய காரியங்களை அடைவது எப்படி? இதற்கு ஓர் எண்ணமுறை சிந்தனைமுறை இருக்கிறதா? என்று பலரும் கேட்கிறார்கள். ஆம் ஓர் எண்ணமுறை இருக்கிறது. அதைப் படிப்படியாக உபயோகிப்பதன் மூலம் நம் விருப்பங்களைச் சாதனைகளாக்க முடியும். இம்முறை பலரால் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. சாதனையாளர்களின் அனுபவமும் இதற்குச் சாட்சி கூறுகிறது. கனடா தேசத்து மூளைமருத்துவர் டாக்டர் பென்ஃபீல்டு என்பவரின் சோதனைகள் இம்முறைகளுக்கு ஒரு விஞ்ஞான ஆதாரத்தைக் கொடுத்திருக்கின்றன மூளையில் அவர் நிகழ்த்திய சோதனைகள் மனதினைப் பற்றியும், வெற்றியடையும் மார்க்கத்திற்கு மனம் எப்படி வழிவகுக்கிறது என்பது பற்றியும், பல உண்மைகளை நமக்குத் தெரிவிக்கிறது;

### எண்ணங்களின் படம்

நமது எண்ணங்கள் எப்படி நம் மனத்தில் உருவாகின்றன என்பது பற்றி என்றாவது சிந்தித்திருக்கிறீர்களா? சிந்தித்தால் ஓர் உண்மை புலப்படும். நமது எண்ணங்கள், டைப்ரைட்டரில் அச்சடிக்கப்படும் எழுத்துக் கோவையாக நம் மனத்தில் தோன்றுவதில்லை. எண்ணங்கள் மனத்தில் படங்களாக விரிகின்றன. டைப்ரைட்டர் என்று படிக்கும்போது, நமது மனம்சட்டென்று அந்த உருவத்தை, வடிவத்தை அத்துடன் தொடர்புகொண்டுள்ள மேஜை, அலுவலகம் போன்றவற்றைத்தான் உடனடியாகப் படமாகக் காண்கிறது. மற்றும் சிலர் மனத்தில் டைப் அடிக்கும் மங்கை தோன்றக் கூடும். கல், மண், மேஜை, பெண் என்னும் போது நாம் ஒரு வடிவம் கொண்ட பொருளை எண்ணுகிறோம். அப்படி இல்லாது வடிவமற்ற பரம் பொருள் என்ற எண்ணம் தோன்றும்போது நம்மனத்தில்,என்னஎண்ணம்தோன்றுகிறது? நாம் அறிந்தவரையில் பரம்பொருளைக் கற்பனையில் காண்கிறோம்; இரண்டும் இரண்டும் நான்கு என்ற கூட்டலை எண்ணும்போது கூட மனத்தில் அந்தஎண்ணங்களின் படம்தான் உருவாகிறது. இதுதான் மனத்தின் அடிப்படைஉண்மை. எண்ணங்களின் மனத்தில்படஉருபத்தில்கற்பனையில் விரிகின்றன.

புதிய கட்டிடம் கட்டுமுன், அதன் அளவுகளைக் கட்டிட நிபுணர்கள் படம்வரைகிறார்கள். அதற்குமுன் அக்கட்டிட அமைப்பு-நிபுணர்களின் கற்பனையில் உருவாகிறது தெரிகிறது எழுத்தாளர்களைக் கேட்டால் கூறுவார்கள்,அவர்களது கற்பனை எப்படிஇயங்குகிறது என்று. கதாநாயகர்களுடனும் கதாநாயகிகளுடனும் தாங்கள் பேசுவதையும் சிரிப்பதையும் ஓடுவதையும் பற்றி அவர்கள் கதைகதையாகக் கூறுவார்கள். பாரதி தீர்க்கதரிசனம்பற்றிப் பேசுகிறோம்; விடுதலை வருமுன்னே, தம் கற்பனையில் பட்டொளி வீசிப்பறக்கும் கொடியினையும், கம்பத்தின் கீழ்நிற்கும் வீரர்களையும் அவன் கண்டான்; நேருவுக்குச் சுதந்திர இந்தியாவைப் பற்றியகனவு, தீர்க்கதரிசனம் இருந்தது இன்றுநாம்காணும் ஒவ்வொரு பொருளும் ஒரு காலத்தில் யாரோ ஒருவரது மனதில் வெறும் கற்பனையாகவிருந்தது. பின்னொரு நாளில் அவை உண்மைவடிவம் பெற்றன;

### கற்பனை

மகத்தான விஞ்ஞானி எடிசன் கூறுகிறார். 'நான் எதையும் வார்த்தைகளாகச் சிந்திப்பதில்லை. எல்லாவற்றையும் படமாகத்தான்பார்க்கிறேன்' என்று 'கற்பனைதான்உலகை ஆள்கிறது' என்றான் நெப்போலியன். இரவுபூராவும் உட்கார்ந்துபிரெஞ்சு நாட்டுப் படத்தை வைத்துக்கொண்டு துருப்புக்களை அங்கும்இங்கும் நகர்த்திக் கொண்டிருப்பானாம் நெப்போலியன் அவனது கற்பனைகளே பின்னால் சரித்திரமாக மாறின. ஹென்றி கெய்சர் என்ற அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர் 'உன் எதிர் காலத்தை நீ கற்பனை செய்து கொள்ளலாம்' என்று கூறினார்.இவ்வளவு எளிதாக எதிர்காலம் இருக்கும் போது, நாம் ஏன் கற்பனை செய்ய மறுக்கிறோம். நம்மில் பலருக்குக் கற்பனையைப் பற்றிய இவ்வுண்மை தெரியாது.

நம்மில் பலருக்கு நம் கற்பனையில் ஒரு படத்தை நிரந்தரமாக வைக்க முடிவதில்லை.மன எண்ணங்களை நமது சமயக்குரவர்கள் ஒரு குரங்குக்கு ஒப்பிட்டார்கள். மனத்தில் எண்ணங்கள் தாவிக்கொண்டே இருக்குமாம், எண்ணம் தாவும் போது,அது ஒரு முகப்படுவதில்லை.ஒரு முகப்படுத்தாத எண்ணம் - நெறிப்படுத்தாத மனம்-எதையும் சாதிப்பதில்லை.மனக்கண்ணாடியில் ஒரு நிரந்தரமான படத்தை வைக்கும் போதுதான், அது கற்பனை என்ற முதலிடத்திலிருந்து நம்பிக்கை, 'உண்மை' என்ற இரண்டாவது கட்டத்திற்கு மாறுகிறது.அதாவது நமது புலனறிவிலிருந்து ஆழ்மனம் என்ற பகுதிக்குப் (Conscious to sub-Conscious) போகிறது. ஆழ்மனப் பகுதிக்குப் போகும் எண்ணங்கள் அசாதாரண வலிமையை அடைகின்றன.

### ஆழ்மனத்தின் எண்ணம்

நமது வேண்டுகோள்கள், பிரார்த்தனைகள், பலனளிப்பது ஆம்முறையில்தான், நாம் நமக்கு வேண்டியதைப் பற்றித் தினமும் வேண்டிக் கொள்கிறோம், தினமும் பிரார்த்திக்கிறோம், வேண்டுகோள் என்பது திரும்பத் திரும்ப நாம் ஆண்டவனிடம் கூறுவதாகும், அல்லது மனத்திற்குக் கூறுவதாகும், திரும்பத்திரும்ப நம்வேண்டுகோளைக் கற்பனையில் காண்பதாகும்,இப்படிச் செய்யும் போது நாம் காணும் கற்பனை ஆழ்மனதில் பதிகிறது, ஆழ்மனம் நமது கட்டுப்பாட்டில் முழுவதும் இல்லை, சில சமயம் பழைய நினைவுகளை நமது ஆழ் மனத்திலிருந்து நம்நினைவுககுக் கொண்டுவா முடியும் சில சமயம் கொண்டுவர முடியாது. ஆனால் நமது நினைவு அறிவில், ஒன்றை சதா எண்ணுவதன் மூலம் அந்த எண்ணத்தை ஆழ்மனத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.

ஆழ் மனத்தில் நாம் இதுவரை அனுபவித்த உணர்ச்சிகள் எல்லாம படமாகப் பதிந்திருக்கின்றன; வேறு வார்த்தைகளில் சொன்னால் நமது வாழ்க்கைச் சம்பவங்கள அனைத்தும் உணர்ச்சிகளாகி மனத்தில் பதிந்திருக்கின்றன. இங்குதான் டாக்டர் பென்ஃபீல்டின் முயற்சி விஷயங்களைத்தெளிவு படுத்துகின்றன, மருத்துவச் சோதனைகள் ஆதாரம் கொடுக்கின்றன. காக்காய் வலிப்புக் கொண்ட சிலரை டாக்டர் பென்ஃபீல்ட் குணப்படுத்த மூளை அறுவை செய்தார். மூளைமட்டும் மரத்துப் போகும் ஊசிபோட்டு இச் சிகிச்சை செய்தார். இதனால் சிகிச்சை பெறுபவர் முழு நினைவுடன் இருக்க முடிந்தது. பேச முடிந்தது. டாக்டர் பென்ஃபீல்ட்டு லேசான மின்துருவங்களால் மூளையின் வலது முன்பகுதியைத் தொட்டார்.

### ரேப்றெக் கோடர் போல்வது

உடனே அந்த மருத்துவ சிகிச்சை பெறும் நபர் 'யாரோ பியானோ இசைக்கிறார்கள் என்னால் அப்பாட்டைக் கேட்க முடிகிறது' என்றார். டாக்டர் மின் கம்பிகளை சற்று நேரம் எடுத்துவிட்டு, மீண்டும் வைத்த போது 'மேரி, மேரி என்ற பாட்டைப் பாடுகிறார்கள் என்று வர்ணிக்கத் தொடங்கினார். டாக்டர் பென்ஃபீல்டு சுமார் பதினைந்து ஆண்டுகள் இத்துறையில் சோதனைகள் செய்தார். அதன் விளைவாக அவர் கண்ட உண்மைகள் மன இயக்கங்களைத் தெளிவு படுத்தின;

நாம்அனுபவித்த அத்தனை உணர்ச்சிகளும் மனத்தில் சம்பவங்களாகப் பதிந்திருக்கின்றன. ரேப்றெகோடரைப் போல நாம் மீண்டும் அதைப் போட்டுக் கேட்க முடியும். ஒரு சம்பவம் திரும்ப ஞாபகத்திற்கு வரும்போது மனிதன் அதே உணர்வுடன் அச்சம்பவத்தை மீண்டும் அனுபவித்து வாழ்கிறான். ஒவ்வொரு சம்பவமும் தனித் தனியே வெளிவருகிறது. எல்லாம் சேர்ந்து குழப்பமாக வருவதில்லை, மூளையின் பல பகுதிகளில் பலவிதச் சம்பவங்கள் - உணர்ச்சிகள் பதிந்து கிடக்கின்றன என்பதாகும்;

நமது ஆசைகள் மனத்தில் கற்பனைகளாக, படங்களாக விரிகின்றன என்று கண்டோம். டாக்டர் பென்ஃபீல்டோ வாழ்க்கைச் சம்பவங்கள் உணர்ச்சிகளாக ஆழ்மனத்தில் பதிந்திருக்கின்றன; என்றும், அவை மீண்டும் நினைவுக்கு வரும் போது பழைய நிகழ்ச்சிகளை அனுபவித்து மீண்டும்வாழ்கிறோம் என்றும் கூறுகிறார். ஆசைக்கும் கற்பனைக்கும் ஆழ்மனத்திலிருக்கும் பழைய நினைவுகளுக்கும் சாதனைக்கும் ஏதாவது தொடர்பிருக்க முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்; ●

## தினசரி தியானம்

### உண்மையின் உயர்வு

உண்மை என்பது நீதி, நீதி என்பது ஒளி, ஒளி என்பது பேரின்பம், அகிம்சை, சத்திய'ம் பிரமச்சரியம், தூய்மை, நீதி ஒற்றுமை, மன்னிக்கும்தன்மை, அமைதி முதலானவை உண்மையின் உருவங்கள்; அரிச்சந்திரன் உண்மையைக் கடைப் பிடித்தான்; தன் உயிரையும் பொருட்படுத்தாமல், அவன் உண்மையைப் பற்றி நின்று, சாகா நிலையையும், அழியாப் பேரின்பத்தையும், இறவாப்புகழையும் பெற்றான். அவன்இன்னமும் நம் உள்ளத்தில் வாழ்கின்றான். எனவே, உண்மையைக் கடைப்பிடிப்பதில் உறுதியாயிருங்கள்; உண்மையைப் பயிலுங்கள் உணருங்கள்.

சுவாமி சிவானந்தர்.

## அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை

(கொழும்பு)

அரிசி ஆலைகளின் உரிமையாளர்களும் வர்த்தகர்களும் பெரும் தொகையான அரிசியை இருப்பில் வைத்திருப்பதால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என கொழும்பு விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது;

இதேவேளை, அரிசி ஆலைகளின் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தி போதியளவு அரிசியை சந்தைக்கு விடுமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளவேண்டும் என விவசாயப் பயிற்சி நிலையத்தின் உணவுப் பிரிவு நிபுணர் ரூபசேன அரசிற்கு தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் தங்களின் அரிசி இருப்புக் குறித்துவிரிவான அறிக்கையை சமர்ப்பித்து வருகின்றன.

இந்த நடைமுறை இலங்கையில் மேற்கொள்ளப் படுவதில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்;

அத்துடன் முன்னைய அரசாங்கத்திற்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் தாம் இது பற்றிய வேண்டுகோள் விடுத்தமையையும் நினைவு கூர்ந்துள்ளார்.

அரிசி இருப்புகளை கவனத்தில் கொளளாது மேலதிகமாக அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டால் இங்குள்ள விவசாயிகள பாரதூரமான விளைவுகளை எதிர் நோக்குவர் என்றும் எச்சரித்துள்ளார்.

(உ-10)

# வேலூர் சிறையில் வை.கோவை கலைஞர் கருணாநிதி சந்தித்தார்

## அண்ணன் தம்பி உறவு என்கிறார் கலைஞர்

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியை தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

சுமார் 45நிமிடம் வரை நடைபெற்ற இச்சந்திப்பித் தொடர்பாக கருணாநிதி செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில்:-

அரசியல் உறவுக்கு அப்பாற்பட்ட அண்ணன் தம்பி உறவு எனக்கும் வைக்கோவிற்கும் உண்டு அந்த அடிப்படையிலேயே தான் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. ம.தி.மு.காவையும் வை. கோவையும் நான் தனித்தே பார்க்கிறேன்.

பொடா சட்டம் பற்றி நானும் வை.கோவும் எதுவும் பேசவில்லை. அச்சட்டத்தினைத் துஷ்பிரயோகம் செய்ததன் விளைவே வை.கோ சிறைவாசம் அனுபவிக்கக் காரணம் எனினும் பிணையில் வராததையிட்டு வை.கோ கவலைப்படவில்லை.

நான் எழுதிய "திருக்குறள் கலைஞர் உரை" என்ற புத்தகத்தை வை.கோவிடம் பரிசாகக் கொடுத்தேன் என்றும் கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(த)

# பாராளுமன்றை பகிஷ்கரிக்கப் போவதாக மட்டு. எம்.பி கிருஷ்ணபிள்ளை அறிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை இன்று முதல் பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29ந் திகதி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக் கச்சேரிக்கு சென்றபோது, வீதியில் இராணுவத்தினர் அவரை 45நிமிட நேரம் தாமதிக்க வைத்து விசாரணை செய்துள்ளனர்.

இச்சம்பவம் தனது கௌரவத்திற்கு இழுக்கு என்றும், திட்டமிட்டு நடத்தப்பட்டதென்றும் குறிப்பிட்டுள்ள கிருஷ்ணபிள்ளை எம்.பி,

சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்வரை பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் இச்சம்பவம் குறித்து தனது கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசோ அல்லது தமிழ்க் கூட்டமைப்பினரோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததையிட்டு தான் வேதனை அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(இ-15)

# கிழக்கு மாகாணத்தில் தமிழீழக் காவல்துறை நேற்று திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான தமிழீழக் காவல்துறைப் பணிமனை நேற்று பளுகாமத்தில் திறந்து வைக்கப்பட்டது இவ் அலுவலகத்தை விடுதலைப்புலிகளின் மாவட்ட விசேட தளபதி ரமேஸ் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், இராணுவப்புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன், காவல்துறையின் மாவட்ட மேற்பார்வையாளர் கங்கையழகன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

தமிழீழ நியாயாதிக்க எல்லைக்குள் தமிழீழ உறுப்புரிமை சட்ட பிரிவுகளுக்கு ஏற்ப தமிழீழக்காவல்துறை செயற்படும் எனவும் மாவட்ட மேற்பார்வையாளர் கங்கையழகன் தெரிவித்துள்ளார்.

(ந-5)

## வரவு .செலவுத்...

கள், நிவாரணமின்மை என்பவற்றைச சுட்டிக்காட்டி பாராளுமன்றத்தில் உரையாற்றுவதுடன் பாராளுமன்ற விவாதத்திற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் கோருவதென்றும் இக் கூட்டதில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக் கூட்டத்திற்கு முன்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கூடி வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்துள்ளது. இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ஜெயராஜ்பெர்னான்டோ புள்ளே, லக்ஷ்மன்கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ)

## தலைவர் பிரபாவுக்கு உயர்...............

அத்துடன் யாழ் மாவட்ட கிராமிய கோட்ட ரீதியான பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள் பேரணிகான ஏற்பாட்டை தமது அமைப்பிற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொளளுமாறும் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் கேட்டுக்கொண்டுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் தீர்ப்பின் மீதான அதிருப்தியையும் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிக்காட்ட அனைவரையும் அணிதிரளத் தயாராகுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(இ)

## தமிழ்ச்செல்வனை கைது...............

விடுமாறு கேட்டு ஒரு மனுவை சமர்ப்பிப்பதற்கு இக்குழுக்கள் சில முயன்று வருவதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நீதிமன்றத் தீர்ப்புக்கெதிராக தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களின் போது புலிகள் அரசாங்கக் குழுவிடம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கெதிராக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பேசிய மைக்காக தமிழ்ச் செல்வன் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் சுமத்தப் பட்டு, அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று சிஹல உறுமயச் செயலாளர் திலக் கருணாரத்தின தெரிவித்தார். "எமது தலைவருக்கு 200 வருடங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் எமது நீதிமன்றத்தில் முன்னால் அரசத்தலைவர்களை விசாரணை செய்து 2000 வருட சிறைத்தண்டனையை விதித்து விட முடியும்" என்று சு.ப தமிழ்ச் செல்வன் தெரிவித்தமையை சிஹலஉறுமய குற்றம் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

(இ)

## 2வது வரவு ....

ஆயிரத்து 200 கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படுவதாகவும் இதனை ஈடுசெய்ய வெளிநாடுகளில் இருந்து கடனாக 21 ஆயிரத்து 400 கோடி ரூபா பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் 11 ஆயிரத்து 800 கோடி ரூபா இவ் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

(ம)

## பாதுகாப்புக்கான...

உள்ளது. சீனாவுக்கு மட்டும் 283 மில்லியன் யு.எஸ்.டொலர் கடனாக கொடுக்க வேண்டியுள்ளது. கடந்த அரசு பெற்ற யுத்த தளபாட கொள்வனவுக் கடனை அடைப்பதாக இருந்தால் சுமார எட்டு ஆண்டுகள் வரை எடுக்கும.

இந்நிலையில் பாதுகாப்பு செலவினத்திற்கான நிதி ஒதுக்கீட்டை எப்படிக் குறைக்க முடியும் என்றும் பந்துல குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போது இராணுவத்தின் கட்டமைப்பு மறு சீரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பாதுகாப்பு செலவினத்தை நாம் குறைக்க முடியாது.

கடந்த அரசாங்கம் பெற்ற கடனுக்கு வட்டியாக வருடந்தோறும் 11 ஆயிரத்து 200 கோடி ரூபாவை வழங்க வேண்டியுள்ளது.

தற்போது திறைசேரியில் நிதி எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கூட்டுவதாக இருந் தால் அதற்கு வருடமொன்றுக்கு நூறுகோடி ரூபா தேவைப்படும் திறைசேரியில் நிதி இல்லாத போது இது எவ்வாறு சாத்தியமாகும் என்றும் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம்களின் 9எம் பிக்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வரும் நிலையிலும் வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டால் அரசுக்கு வழங்கும் ஆதரவினை மீள் பரிசீலனை செய்யவேண்டி வரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ம)


# TENDER NOTICE

**MINISTRY OF HOUSING AND PLANTATION INFRASTRUCTURE**

**DEPARTMENT OF BUILDINGS**

1. The Chairman Divisional Tender Board, Department of Buildings, Jaffna, will receive sealed tenders for Fabricating, Hoisting and Fixing of mild steel roof trusses at New Post Office, Jaffna up to 10.00 A.M on 15.11.02.

2. Tender forms are available for collection with Chief Engineer (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna up to 3.30 P.M on 08.11.02.

3. Tenders will be opend immediately after the closing at the Chief Engineer's Office, Department of Buildings, Beach road, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

4. Tender forms will be issued only to those who possess prior experience in the above field for the last five years. Documentary evidence shall be annexed.

5. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairmen, Divisional Tender Board, Department of Buildings, Beach Road, Jaffna.

N.Devarajan,
Chief Engineer,
Department of Buildings,
Beach Road, Jaffna.

(C-5214)


## வலம்புரியின் கல்விச் சேவை

**அன்பார்ந்த அதிபர்களே!**

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுனர் பற்றிய குறிப்பு, மாணவர்கள் படைத்த சாதனைகள், தற்போது பாடசாலையின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தும் முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபடவுள்ளது.

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்
**"எங்கள் கல்விச்சாலை"**
பகுதியில் உங்கள் பாடசாலையும்
இடம்பெற வேண்டுமாயின்
உங்கள் சம்மதக்கடிதத்தை
"எங்கள் கல்விச்சாலை"
வலம்புரி
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

வலம்புரியின் கல்விக்குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

**அன்புசால் அதிபர்களே!**

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரி தரும் அரியவாய்ப்பைத் தவற விடாதீர்கள்.

ஆசிரியர்



யாழ் வலய மட்டத்தில் நடை பெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் சென்.ஜோசப் வித்தியாலய அணியை வெற்றி கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரியின் உதைபந்தாட்ட வீரர்கள், கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன், பயிற்று விப்பாளர் ம.வினோகாந் ஆகியோருடன் இருப்பதை படத்தில் காணலாம்.


சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்

**V.S.P லஞ் ஒயில்**

தயாரிப்பாளர்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 06.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.